# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 12 சனிக்கிழமை (28-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:277


# ரணிலை அழைத்து விரைவில் ஜனாதிபதி பேச்சு நடத்துவார்!

## சந்திரிகாவின் சிரேஷ்ட ஆலோசகரான மனோ தித்தவெல வெளியிடும் தகவல்

கொழும்பு,ஒகஸ்ட்28

**“வடக்கு - கிழக்குப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைக்கவிருக்கின்றார். மிக விரைவில் இந்த அழைப்பை அவர் விடுப்பார்”**

**- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரான மனோ தித்தவெல.**

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியிலேயே மனோ தித்தவெல இவ்வாறு கூறியிருக்கின்றார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

“அரசியல் இழுபறி இருந்தாலும் பிரதானமான விடயங்களில் அரசிற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றலுக்கான தேவை இருக்கிறது. அத்தகைய நிலைப்பாட்டில்தான் ஜனாதிபதி இன்னும் இருக்கிறார்.

சமாதானம், பொருளாதாரம் - அதிலும் குறிப்பாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி - விடயங்களில் இரு பிரதான கட்சிகளும் - அரசும், எதிர்க்கட்சியும் - பேசியாகவேண்டும். ஒருமித்த கருத்தில் உடன்படவேண்டும்.

அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் பேச்சு வேண்டும்; தேசிய விவகாரங்களில் கூட்டிணை

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கைதுசெய்த ஊர்காவல் படையினரை பெற்றோர் சந்தித்தனர்

திருகோணமலை,ஒக.28

கடந்த மாதம் 10ஆம் திகதி திருகோணமலை கல்லம்பத்தைக் கிராமத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரையும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் பணியகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் திருகோணமலை மாவட்ட பிரதிநிதி பட்ரிக்கும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய விடுத

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆயுதப்பயிற்சியா? நோர்வே தூதரகம் மறுப்பு

கொழும்பு,ஒக.28

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நோர்வே அரசு ஆயுதப்பயிற்சி வழங்கி வருகின்றதென்று ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டதாக சில ஊடகங்களில வெளியான செய்தியை கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் மறுத்திருக்கின்றது.

இது தொடர்பாக தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்புக்கோ அல்லது வேறு எந்த ஓர் ஆயுதக் குழுவுக்கோ நோர்வே ஆயுதப் பயிற்சியை வழங்கியது கிடையாது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால வரைவு குறித்து தெற்கில் பொய்ப் பிரசாரம்!

## கனேடியப் பிரதிநிதிக்கு தமிழ்ச்செல்வன் விளக்கம்



கிளிநொச்சி,ஒக.28

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக தற்போது தெற்கில் தவறான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கனேடிய சமஷ்டி அமைப்பின் தலைவரும், ஒன்ராறியோ மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான ஒ ரேயை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே தமிழ்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருப்பது மற்றும் இருதரப்புகளுக்குமிடையே தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிநிலை என்பன தொடர்பான சர்வதேச சமூகத்தின் கருத்தும் விளக்கமும் என்ன என்பது குறித்துத் தெளிவாக்கும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கனேடிய அரசியல் விஞ்ஞானபீட போதனாசிரியர் கலாநிதி எச்.ஹெமருனும் இச்சந்திப்பில் உடன் இருந்தார்.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் ஆர்வத்துடனேயே இருக்கின்றனர் என்றும் இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார். (18ஆம் பக்கம் பார்க்க)

## ஈழவேந்தன் எம்.பியை ஒருமணிநேரம் காக்கவைத்த ஓமந்தைச் சிப்பாய்கள்

ஓமந்தை,ஒக.28

கொழும்பிலிருந்து தனது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தனை ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியில் படையினர் சுமார் ஒரு மணி நேரம் தாமதிக்க வைத்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

தமிழ்க்கூட்டமைப்பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் அவரது மனைவி, மகள் மற்றும் உறவினர்கள் சிலருடன் நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்தார்.

பிற்பகல் 3 மணியளவில் ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடிக்கு அவர்கள் வந்து சேர்ந்ததும், அங்கு கடமையில் நின்ற படையினர் ஈழவேந்தனையும் அவரது குடும்பத்தினரையும் சோதனையிடவேண்டும் என்று கூறி அனைவரையும் வாகனத்தை விட்டு இறங்குமாறும் கேட்டுள்ளனர்.

அப்போது தம்மை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று படையினருக்கு அறிமுகப்படுத்திய ஈழவேந்தன் சோதனையிடாமல் வாகனச் சாரதியை மட்டும் இறக்கி உரிய அனுமதிப் பத்திரத்தை(பாஸ்) வழங்கிவிட்டு தொடர்ந்து செல்ல அனுமதிக்குமாறு கேட்டுள்ளார்.

இதனை ஏற்க மறுத்த படையினருக்கும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## விளக்கமறியலில் இருந்த கருணாவின் சகா மட்டக்களப்பிலிருந்து பதுளைக்கு மாற்றம்

மட்டக்களப்பு,ஒக.28

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதி ஒருவர் பதுளைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

கருணாவின் சகா என்று நம்பப்படும் குணசேகரம் சுபேந்திரன் என்பவரே மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும்-

அதனால், தன்னை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் சிறைச்சாலை அத்தியட்சகரிடம் கேட்டுக்கொண்டதையடுத்தே அவர் பதுளைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார் என்று கூறப்பட்டது.

நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் இந்த நபரை ஆஜர்செய்யப்படவேண்டியிருந்தபோதிலும் பதுளை சிறைக்கு மாற்றப்பட்டதால் அவர் ஆஜர்செய்யப்படவில்லை.

இந்தத் தகவலை மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் அஜ்மீருக்கு பொலீஸார் நேற்றுத் தெரியப்படுத்தினர். அவரைப் பிறிதொரு தினத்தில் ஆஜர்செய்வதற்கு அனுமதிக்குமாறும் பொலீஸார் நீதிவானிடம் கேட்டுக்கொண்டனர். (எ-4)

## புலனாய்வுப் பிரிவின் இயக்குநராக கபில ஹந்தவிதாரண மீண்டும் நியமிப்பு

கொழும்பு,ஒக.28

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநராக அப்பதவியிலிருந்து விலகிய கபில ஹந்தவிதாரண பதவி உயர்வுடன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிகேடியராக இருந்த அவர் தற்போது மேஜர் ஜெனரலாக இராணுவத் தளபதி சாந்த கோட்டேகொடவின் சிபார்சின் பேரில் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் இயக்குநராகக் கடமையாற்றிய கபில ஹந்தவிதாரண தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்பே பதவியை இராஜினாமாச் செய்தார்.

தான் இருக்கத்தக்கதாக தன்னிலும் கனிஷ்ட நிலையிலுள்ளவர்களுக்குப் பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் அவர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்திருந்தார் என்று கூறப்பட்டது.

களத்திற்கு நேரடியாகச் சென்று சமர்களில் பங்கேற்ற அனுபவம் அவருக்கு இல்லை என்பதனாலேயே அவரிலும் கனிஷ்ட நிலை பிரிகேடியர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டது.

தற்போது கபில ஹந்தவிதாரணவுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதுடன் அவர் மீண்டும் புலனாய்வுப் பிரிவின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் (க)

## சின்னபாலா கொலைக்கு ஈ.பி.டி.பி. மீதும் சந்தேகம்?

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கந்தசாமி ஐயர் பாலநடராஜ ஐயரின் (சின்னபாலாவின்) கொலைக்கு ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமையே பின்னணி என்ற செய்தி சில இணையத் தள ஊடகங்களிலும் வெளிநாட்டிலிருந்து பிரசுரமாகும் பத்திரிகைகளிலும் வெளியாகியிருக்கின்றது.

ஈ.பி.டி.பி. கட்சித் தலைவரின் உத்தரவுக்கு இணங்க அக்கட்சியின் உறுப்பினர்களே சின்னபாலாவைக் கொலைசெய்தனர் என்று அவை செய்தி வெளியிட்டுள்ளன.

சின்னபாலா விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கின்றார் என்று இலங்கைப் புலனாய்வுப் பிரிவு தனக்கு எச்சரித்திருந்தது என்று தனது கட்சிக் கூட்டத்திலேயே ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, சின்னபாலா மீது குற்றம் சுமத்தியிருந்தார் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்தது. அதன் பின்னர் சின்னபாலாவின் நடவடிக்கைகள் ஈ.பி.டி.பி. கட்சியினால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வந்தன.

கருணாவுடன் தொடர்பு வைத்திருக்கும் கட்சியின் நிலைப்பாடு மற்றும் சமாதான முயற்சிகளில் டக்ளஸின் போக்கு ஆகியவற்றுக்கு சின்னபாலா எதிராக இருந்தார்.

இந்து பிராமணரான சின்னபாலா ஆடி அமாவாசையைக் காட்டி வீட்டுக்கு வந்திருந்தார். தம்முடன் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இல்லாததைப் பயன்படுத்தி அன்று அவர் சுவிஸ் தூதரகத்துக்குப் போகத் திட்டமிட்டிருந்தார்.


சுவிஸ் விசா பெற்றுக்கொண்டு இலங்கையை

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தெல்லிப்பழையில்...






தெல்லிப்பழையில் நேற்று இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் துர்க்கை அம்பாள் தேரில் ஆரோகணிக்க எழுந்தருளி வருவதை முதலாவது படத்திலும் அம்பாள் தேரில் வீற்றிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
*(படங்கள் : வலி.வடக்குச் செய்தியாளர்)*

## செல்வச்சந்நிதியில்...

முருகன் தேர்



விநாயகர் தேர்



தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகனின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாக் காட்சிகள்
*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# சந்நிதி ரதோற்சவம் நாளை: விரிவான ஏற்பாடுகள் பூர்த்தி

வடமராட்சி,ஓக.28

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில் வருடாந்த பெருந் திருவிழாவின் ரதோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

சுமார் 75 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத்தேரில் முருகப்பெருமான் அன்றைய தினம் பவனி வருவார்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுபெறும்.

சப்பரத் திருவிழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களையொட்டி வட பிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போ, தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் என்பன விசேட போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்துள்ளன.

இதுதவிர கோயில் சுற்றாடலில் சுகாதார மற்றும் குடிதண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. (ஐ-173)

# வவுனியாவில் மாவீரர் தின ஏற்பாடுகளைக் கவனிக்கக் குழு

வவுனியா,ஓக.28

வவுனியாவில் இம்முறை மாவீரர் தினத்தை பேரெழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் இப்போதே தொடங்கிவிட்டன.

மாவீரர் நாள் நிகழ்வுகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை, தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட அபிவிருத்திசார் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

மாவீரர் நாள் ஏற்பாடுகளுக்கு என எஸ். சபாநாதன் தலைமையிலான 15பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (9-164)

## சனசமூக நிலைய ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.28

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா முதன்மை விருந்தினராகவும் -

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

60 வயதுக்கு மேற்பட்ட நிலைய உறுப்பினர்கள் விழாவில் கௌரவிக்கப்படுவர். (ஐ)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.28

'விக்னா' கல்வி நிறுவனத்தின் வெள்ளி விழாவை ஒட்டி நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு அடுத்தமாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கவனிக்கவும்

இன்றைய உதயனின் 06ஆம் பக்கத்தில் யாழ். வை.எம்.சி.ஏ. நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான விளம்பரத்தில் -

'Chess' என்பது 'Chees' என்று தவறுதலாக அச்சாகி உள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.





தீவுப் பகுதிக்கான அம்புலன்ஸ் படகு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் வைத்து நேற்று சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் ரைட் படகின் ஆவணங்களைச் சுகாதார பிரதிப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதத்திடம் கையளிப்பதையும் இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அதிகாரிகள், பொலீஸ் மற்றும் கடற்படையினரையும் படங்களில் காணலாம்.
*(படங்கள் : க.ஸ்ரீஸ்கந்தராசா, ஊர்காவற்றுறை செய்தியாளர்)*

# அம்புலன்ஸ் படகு நேற்றுக் கையளிப்பு

தவுப் பகுதிக்கான அவசர நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் அம்புலன்ஸ் படகு நேற்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் ஊர்காவற்றுறையில் வைத்து சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் வைத்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி நீல்றைற் நோயாளர் அம்புலனஸ் படகிற்கான ஆவணங்களை யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

நீண்டகாலமாக அம்புலன்ஸ் படகு இல்லாததனால் அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களில் இருந்த அவசர நோயாளர்களை ஏற்றிச்செல்வதற்கு அப்பகுதிமக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்துவந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவியுடன் இந்தப் படகின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தக் கையளிப்பு வைபவத்தினைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இதில் யாழ்.சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடன் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஏ.ஜே.ஜேசுதாசன், யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றினர். (எ-16)

# உதயன்

## சமஷ்டித் தீர்வுக்கு ஜே.வி.பி. தயாரா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரம் தொடர்பான ஜே.வி.பியினரின் நிலைப்பாடு குறித்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டிருக்கும் கருத்து வியப்புக்குரியதாக இருக்கின்றது.

"கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போகலாம் என்றானாம்!" - என்ற கதையை நம்புவது போல ஜே.வி.பி. குறித்து நம்பிக்கை வைத்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் என்று எண்ணத் தோன்றுகின்றது.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பை ஜே.வி.பியினர் எதிர்க்கின்றனர். ஆனால், சமஷ்டி முறையை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, விட்டுக்கொடுப்புக்களுடன் மீண்டும் பேச்சுகளை ஆரம்பித்தால் நன்மை ஏற்படும்" - என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுவது உண்மையானால், அது இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தில் ஒரு சாதகமான அம்சம்தான். ஆனால், அது அப்படியல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இடைக்கால நிர்வாகம் என்றாலேயே தணலை மிதித்தது போல துள்ளிக் குதிக்கும் ஜே.வி.பி., சமஷ்டிக்கு இணங்கும் என்று நம்புவது பகல் கனவே அன்றி வேறில்லை என்பது அரசியல் அரிச்சுவடி படிக்காதவர்களுக்குக் கூட புரிந்த விவகாரம்.

அதகாரப் பகிர்வை (Devolution of Powers) முற்றாக எதிர்ப்பது என்பதே ஜே.வி.பியின் அடிப்படைக் கொள்கை; கோட்பாடு.

இந்த அரசை அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னர் உருவாக்கப்பட்ட சமயம், அதையொட்டி வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனத்திலேயே இவ்விடயத்தைத் தெட்டத்தெளிவாக தனது நிலைப்பாடாக வெளிப்படுத்தியிருந்தது ஜே.வி.பி.

மாகாணங்களுக்கு அல்ல, மாவட்டங்களுக்கு அல்ல, பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு அல்ல, பட்டினங்கள் - நகரங்களுக்கு அல்ல, கிராமங்களுக்கு நிர்வாகத்தைப் பரவலாக்குவதன் மூலமே (அதுவும் அதிகாரங்களை அல்ல நிர்வாகத்தை - அதுவும் கூட, பகிர்வது அல்ல, பரவலாக்குவதன் மூலமே)- Decentralisation of Administration மூலமே - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற தனது 'அழுங்குப் பிடி' நிலைப்பாட்டை ஜே.வி.பி. சொல்லிலும் செயலிலும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றது. அதில் கிஞ்சித்தும் மாற்றத்தை சாடைமாடையாகக் கூட அது வெளிப்படுத்தாத நிலையில், இப்படி புதுக்கதை விட அமைச்சர் டக்ளஸ் முயற்சிப்பது 'ஆசைகாட்டி மோசம் செய்ய' எடுக்கும் செயற்பாடாகவே அர்த்தப்படுத்தப்படும்.

சரியோ, பிழையோ ஈழத் தமிழர்களின் தாயகப் பூமியில் கணிசமான பிரதேசத்தை அவர்களின் ஏகப் பிரதிநிதிகளான புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கென்று தனியான இராணுவம், கடற்படை ஆகியன உள்ளன. சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கான காவல்துறை உள்ளது. நீதிமன்றமும், நீதிமன்ற முறைமைகளும் சட்டக்கோவைகளும் உள்ளன. தனியான ஆயப்பகுதி முறைமை பின்பற்றப்படுகின்றது. ஒரு தனிநாட்டுக்குரிய நிர்வாகக் கட்டமைப்பு அங்கு செயற்படுகின்றது.

'போரம் ஓவ் பெடரேஷன்' தலைவரும், கனடா, ஒன்ராறியோ, மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான பொப் ராய் கூறுவது போல, இலங்கைக்குள் இன்னுமோர் அரசு உண்டு. அதற்கு இன்னமும் சர்வதேச சட்ட அங்கீகாரம் கிடைக்கவில்லையே தவிர, ஓர் அரசுக்குத் தேவையான கட்டமைப்புகளைக் கொண்டு அது இயங்குகின்றது. அதை யாரும் மறுக்கமுடியாது - என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்

இதுதான் யதார்த்த நிலைமை. இத்தகைய செயற்பாட்டில் இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தனது 'கிராம ராஜ்யம்' என்ற கானல் நீரைக் காட்டிச் சமாளிக்கலாம் என்ற கற்பனையில் பிதற்றுகின்றது ஜே.வி.பி.

அதைப் புரியாதவர் போலப் பேசுகின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தமிழர்களின் அபிலாஷைகளை ஆயுத, அரசியல் பலத்தோடு முழங்குபவர்கள் புலிகள். அதனால், பேரினவாதிகளான ஜே.வி.பியினருக்கு புலிகள் மீது எரிச்சல். புலிகளை எதிர்ப்பதால் டக்ளஸுக்கு அவர்கள் புகழாரம் சூட்டுவது வழமையாகிவிட்டது. இதைப் புரியாமல், ஜே.வி.யினரை நம்பி அமைச்சர் டக்ளஸ் கதைவிடுகிறார். அதைப் பார்க்க - கேட்க - பரிதாபமாக இருக்கிறது. அவ்வளவே!

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

இது அமைச்சர் டக்ளஸுக்கு மட்டுமல்ல, புலிகளையும் தமிழர் தரப்பையும் பேரினவாதத்துடன் மிக மோசமாக எதிர்க்கும் - விமர்சிக்கும் - ஜே.வி.பிக்கும் நன்கு தெரியும்.

இந்தப் பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதாயின் என்ன செய்யவேண்டும் என்பதும் ஜே.வி.பிக்கு புரியாததல்ல. அந்த ஜே.வி.பியுடன் சேர்ந்து அரசில் பங்கு கொள்ளும் அமைச்சர் டக்ளஸ்,. தமிழருக்கு நியாயமானதை வழங்க ஜே.வி.பியை வற்புறுத்தி இணங்கவைப்பதுதான் அவருக்கு அழகு; நியாயம்.

# எழுவைதீவில் 64லட்சம் ரூபா செலவில் உட்கட்டுமான வேலைத்திட்டங்கள்

## ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் தகவல்

ஊர்காவற்றுறை,ஓக.28

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் கீழ் (காா்ப்) எழுவைதீவுப் பிரதேசத்தில் அறுபத்திநான்கு லட்சம்ரூபா செலவில் பாரிய உட்கட்டுமான வேலைகள் விரைவில் ஆரமபிக்கப்படவுள்ளன.

அண்மையில் எழுவைதீவு றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்ற வேலைத் திட்டங்களை இனம் காண்பது சம்பந்தமான கலந்துரையாடலில் தலைமை வகித்து உரையாற்றிய தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், எழுவைதீவுப் பிரதேசம் போரிற்கு நேரடியாக முகம் கொடுக்காத போதும் சமுதாய உட்கட்டுமான வசதிகள் அற்ற பிரதேசமாகவே காணப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டே எமது பிரதேச செயலர் பிரிவில் எழுவைதீவுப் பிரதேசத்தை "காா்ப்" திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முன்வந்துள்ளோம்.

தற்போது ஒதுக்கப்பட்ட நிதி வருடாந்தம் நாடாளுமன்ற உறுப்பினர்களுககு ஒதுக்கப்படும் நிதியை விட 24லட்சம் ரூபா கூடியது. எனவே, உங்கள் பிரதேசத்தை அபிவிருத்திசெய்ய நீங்களும் இத்திட்டத்தில் பங்காளிகளாக இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்றார்.

'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ்.கெங்காதரன் உரையாற்றுகையில்:-

எழுவைதீவுப் பிரதேசத்தில் காா்ப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 64 லட்சம் ரூபா நிதியானது உங்களிடம் இருந்து சமா்ப்பிக்கப்படும் வேலைத் திட்டங்களை அடிப்படையாகக்கொண்டு நிறைவேற்றுவதற்குப் பயன்படும்.

இவ்வேலைத் திட்டங்கள் சமுதாய உட்கட்டுமான வசதிகள், தொழிற்பயிற்சிகள், சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான வசதி வாய்ப்புக்கள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமையும். இவை யாவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்படும்.

உங்கள் பிரதேசங்களில் மேற்கொள்ளபபடும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் அரச அதிகாரிகளிடம் பல கோரிக்கைகளை முன்வைத்திருப்பீர்கள். அவை இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்ற அங்கலாய்ப்பு உங்களுக்கு இருக்கும். இதனைக் கருத்திற் கொண்டே 4லட்சம் ரூபா செலவில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வேலைகளை 2 கிழமைக்குள் ஆரம்பிக்கவுள்ளோம். எதனை உடன் ஆரம்பிக்கவேண்டும் என்பதை நீங்களே முடிவுசெய்ய வேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொருவர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் முதியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், திருமணமான ஆண்கள், பெண் கள் எனத் தனித்தனியாக பிரிக்கப்பட்டு வேலை முன்மொழிவுகள் பெறப்பட்டன.

இதன் அடிப்படையில் வைத்திய சாலை, மின்சார விஸ்தரிப்பு, பயணிகள் தங்குமடம், பொது மண்டபம் அமைப்பது குறித்து கூடுதலான முன்மொழிவுகள் சமா்ப்பிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரிகள், எழுவைதீவு கிராம அலுவலர் வ.வடிவழகையன், சமாதான நீதிவான் ரி.செபமாலை மற்றும் பிரதேச சபை, பலநோ.கூ.சங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (எ-16)

# உடுவில் கல்விக்கோட்ட சைவத்திருமுறை விழா இந்த ஆண்டும் சிறப்புற நடைபெறவுள்ளது

வலி.தெற்கு,ஓக.28

உடுவில் கல்விக் கோட்டத்தில் இவ்வருடமும் சைவத்திருமுறை விழாவைச் சிறப்பானமுறையில் நடத்துவதற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

சைவத் திருமுறை விழாவையொட்டி நடைபெறவுள்ள போட்டிகளில் சகல மாணவர்களையும் ஈடுபடுத்திச் சைவ கலாசாரத்தையும், சைவப் பண்பாட்டு ஒழுக்க நெறிகளையும் அனுசரிக்கும் வண்ணம் மாணவர்களை ஊக்கப்படுத்துமாறு உடுவில் கோட்ட அதிபர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சைவத்திருமுறை விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சைவத்திருமுறைப் பண்ணிசை, நீதிச் செய்யுள் மனன முற்றோதல், தொண்டுபடும் செயன்முறைப்போட்டிகள் மற்றும் திறந்தநிலைப் போட்டிகளாக புராணபடனப் போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி, சைவசமய அறிவு வினாவிடைப் போட்டி என்பவற்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

போட்டிகளை நடத்துவதற்கும் சைவத திருமுறை விழாவை ஒழுங்குபடுத்துவதற்கும சைவ சமயத் திருமுறை விழாக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் நடைபெற உள்ள நவராத்திரி விழாக் காலங்களில் பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் பெயர்களைத் தருமாறும் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றவர்களின் விவரங்களைக் கோட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனுப்பி வைக்குமாறும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

போட்டிகள் யாவும் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும் நடைபெறும்.

கோட்டமட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அதிபர்களை அவர் கோரியுள்ளார்.

• போட்டி தொடர்பான விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (10-152)

# யாழ். மாவட்டத்தில் பாலின் விலை இரண்டு ரூபாவினால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.28

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து பாலின் விலையை இரண்டு ரூபாவினால் அதிகரிக்கவுள்ளது.

இதன்படி தற்பொழுது 24 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டு வரும் ஒரு லீற்றர் பால் முதலாம் திகதியிலிருந்து 26 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

எரிபொருள்களின் விலையேற்றம், ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாகச் சங்கத்துக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதை அடுத்தும் பாலுக்குக் குடாநாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்தும் பாலின் விலை இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் 'உதயனுக்குத்' தெரிவித்துள்ளார். (10)

### ஆவணி அவிட்ட உபாகா்ம நிகழ்வுகள் திங்களன்று

உலகம் முழுவதும் நன்றாக இருக்கும் பொருட்டு புதுப்பூணூல் அணிந்து வேதம் ஆரம்பிக்கும் நாளான ஆவணி அவிட்ட உபாகா்ம நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை அனைத்துப் பிராமணாகளாலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

யசுா்வேத பிராமணா்களால் அன்றைய தினம் உபாகா்மம் மேற்கொள்ளப்படும் 'நியந்தரி' அமைப்பின் சாா்பில் வழமை போல அன்றையதினம் காலை 10மணிக்கு நல்லூர் சிவன்கோயில் மண்டபத்திலும் சா்வதேச இந்துமத குருமாா் ஒன்றியத்தின் குருகுல கலாசாலையில் 9 மணிக்கு -

இணுவில் தா்மசாஸ்தா குருகுல காயத்ரி பீடத்தில் காலை 9 மணிக்கும் உபாகா்மம் ஆரம்பமாகி நடைபெறும்.

இந்நிகழ்வுகளை மயிலணி சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள், இணுவில் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் மற்றும் இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள ஒன்றியத்தின் குருகுல உபாத்தியாயா் ஆகியோா் தலைமையேற்று நிகழ்த்துவாா்கள். (10-152)

# சுகாதார உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பற்றி அறிவிப்பு

வலிதென்மேற்கு,ஓக.28

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அன்று ஐந்து வருடகால சேவையைப் பூர்த்திசெய்யவுள்ள சகல உத்தியோகத்தர்களும் இடமாற்றத்திற்கு உட்படுவார்கள் என்று அறிவிக்கும் புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்டத்திற்குள் 5 வருட சேவையைப் பூர்த்திசெய்துள்ள பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவசேவை அலுவலர்கள், மத்திய தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வருடாந்த இடமாற்றத்தில் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவார்கள் என்று திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரசேவை பணிப்பாளர் சகல பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைகளுக்கும் அந்த சுற்றறிக்கைமூலம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தங்கள் இடமாற்ற விண்ணப்பத்தை அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்பு தமது பணிமனைக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று யாழ் சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் தமது பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். (ஐ-135)

### நாளை

ஆவணி 13
ஞாயிற்றுக்கிழமை
(29.08.2004)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 10.41 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 10.23 வரை.
சுபநேரம்: 9.05 - 10.35
ராகுகாலம்: 4.35 - 6.05
(பழைய நேரப்படி)

# சாவகச்சேரி இந்துவின் கட்டடப் பணிகள் நிதியின்றி ஸ்தம்பிதம்

தென்மராட்சி,ஓக.28

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட மூன்றுமாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதி வேலைகள் நிதியின்மையால் நிறுத்தப்பட்டுள்ளதாக கல்விச் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். 1999ஆம் ஆண்டு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையினால் நிதி வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தள வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வினால் வேலைகள் நிறுத்தப்பட்டன. பின்னர் வேலைகள் பூர்த்தியடையவில்லை எனத் தெரிவித்து ஒதுக்கப்பட்ட நிதி மீளப்பெறப்பட்டது.

கலலூரி மீள ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை கட்டட வேலையை ஆரம்பிப்பதற்கு நிதி வழங்கப்படாததால் கட்டட வேலைகள் பூர்ததியாக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. வெளிநாட்டில் வசிப்பவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் ஆகியோர் வழங்கிய நிதியுதவியுடன் தள வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு தற்போது இது வகுப்பறைகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. (எ-117)

### உதயவாக்கு

நாம் விவேகத்தால் வழிகாட்டப்படுவதற்குப் பதிலாக உணர்ச்சிகளால் வழி தவறுகிறோம்.

### மிதிவெடிகளை அகற்றக் கோரிக்கை

வலி.மேற்கு பிரதேசசெயலர் பிரிவில அண்மையில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மிதிவெடிகள் அதிகம் காணப்படுவதால் அதனை அகற்றித்தருமாறு கோரி வலி. மேற்கு பிரதேசசெயலர் யாழ் மாவட்ட செயலகத்திலுள்ள மிதிவெடி அலுவலகத்திற்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வலி.மேற்கு பிரதேசத்தில் இராணுவக் காவலரண் அருகே மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் மிதிவெடிகள் பெருமளவில் உள்ளன.

குறிப்பாகப் பாணாவெட்டி என்னும் இடத்தில் மக்கள் காவலரணுக்கு அருகில் குடியமர்ந்திருப்பதால் இப்பகுதியில் மிதிவெடிகளும் அதிகமாக இருப்பதை உணர முடிகின்றது.

அண்மையில் இப்பகுதியில் மணிராசா என்பவர் காணியினைத் துப்பரவு செய்யும் வேளையில் தொடராக மிதிவெடிகள் வெடித்துள்ளன.

இதனால் இப்பகுதி மக்கள் மிதிவெடி அபாயத்துக்குள்ளாகியுள்ளனர். எனவே இதனைத் தங்கள் கருத்தில்கொண்டு மக்களின் அன்றாட தேவைகளைப் பாதிகாத வகையில் இப்பகுதியில் உள்ள மிதிவெடிகளை அகற்றி உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (10-13)


## அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS

## Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (4) 2004

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்துவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| Diploma In WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma In Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |

50% OFF

### Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma In Multimedia | ~~5000~~. | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Individual Courses
- Fox Pro Pascal
- C Language / C++
- Java
- Microsoft Office
- Microsoft Visual Basic 6.0
- Internet & E-mail

September 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch -01 - 05/09/2004
Batch -02 - 10/09/2004
Batch -03 - 15/09/2004

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0777917781


# கண்ணீர் அஞ்சலி



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புக்குரியவரான

## திருமதி
## சண்முகநாதன் சரஸ்வதி

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாய் இருந்தீர்
ஆதரவாய் அரவணைத்துப் பாசமுடன் பழகினீர்
இன்பவாழ்வு நாம் வாழ உம்மையே அர்ப்பணித்தீர்
கன்றையிழந்த பசுவாய் கதறுகின்றோம் நாம்
துன்பசாகரத்தில் எமை மூழ்கடித்தீர் அம்மா!
உங்கள் தூய அன்புக்கு ஈடுஇணை கிடையாது
என்றும் உமை நினைந்து ஏங்கித் தவிக்கின்றோம்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாகேஸ்வரன் 781-369-1691 (U.S.A)
ராதா 508 -879-0081 (U.S.A)
சிந்தன் 059 494776 (UAE)
விக்கி 416-438-0274 (CANADA)
ஞானி (32) 494 365982 (BELEGEAM)
ராஜு 905 502 5168 (CANADA)
ரஜி 905 803 8016

15, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2913

(35773)(40-12)

# கோலாகலமாகத் தொடங்கிய வர்த்தகக் கண்காட்சி




யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் வர்த்தகக் கண்காட்சி நேற்றுக்காலை கோலாகலமாக ஆரம்பமாகியது. யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நாடா வெட்டிக் கண்காட்சியைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மங்கள விளக்கேற்றினார். அதைத் தொடர்ந்து வர்த்தகப் பெருமக்கள், வங்கி அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள் மங்கள விளக்கேற்றினர். அதன்பின் அரச அதிபர் மற்றும் பிரமுகர்கள் காட்சிச்சாலைகளுக்குச் சென்று காட்சிப் பொருள்களைப் பார்வையிட்டனர். சைக்கிள் வகைகள், மோட்டார் சைக்கிள் வகைகள், இரும்புப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள, இனிப்பு மற்றும் பிஸ்கட் வகைகள், பெயின்ட் வகைகள், இயந்திர சாதனங்கள், கூரைத்தகடுகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் எனப் பல்வேறுபட்ட நானாவிதப் பொருள்களை 40இற்கும் மேற்பட்ட தெற்கு நிறுவனங்கள் காட்சிக்கு வைத்துள்ளன. உள்ளூர் உற்பத்தியாளர்களான அண்ணா உற்பத்தி நிறுவனம், 'ஜசுபி' சுன்னாகம் 'ஜாம்'கோடியல் உற்பத்தி நிறுவனம், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் எனப் பல தரப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்களும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன், சேரன் வாணிப நிறுவனம் பொதிசெய்யப்பட்ட அரிசி, அவல், ஐஸ் கீறிம், நல்லெண்ணை போன்ற பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தது.

தெற்கில் உற்பத்தியாகும் புதிய புதிய பொருள்களை எமது மக்கள் பார்த்து அதன் தரத்தை அறியக்கூடிய வாய்ப்பாக இக்காண்காட்சி அமைந்திருந்தது.

கண்காட்சியில் முக்கிய அறிமுகமாக 12 பேர் பயணம் செய்யக்கூடிய மூன்று சில்லு ஓட்டோ வாகனம் ஒன்று இருந்தது. இந்தியத் தயாரிப்பான இந்த ஓட்டோ முதல் முதலாக இங்கு அறிமுகமாகியுள்ளது. பொதுமக்களுக்குப் பயன்தரு பல்வேறு அம்சங்களுடன் மிளிர்கின்றது இக்கண்காட்சி.

# வடக்கு - தெற்கு வர்த்தகம்: இடைவெளி குறைகின்றது

யாழ். மத்திய கல்லூரியில் வர்த்தகக் கண்காட்சி ஆரம்பமாகிய சிறிது நேரத்தில் அங்கு பொருள்களைக் காட்சிப்படுத்திய நிறுவனங்களைச் சார்ந்த பலரையும் உதயன் அலுவலகச் செய்தியாளர் சந்தித்து செவ்வி கண்டார். அவர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பு இது. *செவ்வித் தொகுப்பு: துகா*

## ரீச்சாட் நிறுவனம்



**பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்யும் ரீச்சாட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சீசஸ் ரீச்சாட் கூறியதாவது:-**

தெற்குக்கும் - வடக்குக்கும் வர்த்தகத் துறையில் உள்ள இடைவெளியை இக் கண்காட்சி நீக்கும் எனக் கருதுகின்றேன்.

நீண்ட காலமாக அப்பியாசக் கொப்பிகளைத் தயாரித்து மாணவர்கள் கல்வியில் நாட்டம் கொள்ள உதவிவருகின்றோம் அப்பியாசக் கொப்பிகளை அழகுற அச்சிட்டு மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் அளிக்கின்றோம்.

ஏழை மாணவர்கள் கல்வியைப் பெற வசதியாக இலவசமாகவும் அப்பியாசக் கொப்பிகளை வழங்குகின்றோம் விரைவில் யாழ். மாணவர்களுக்கு இந்த வசதியை வழங்க முடிவு செய்துள்ளோம்.

## இரத்தினகோபால்ஸ



**யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கும் இரத்தினகோபால்ஸ் நிறுவனப் பொறுப்பாளர் என்.ஜெயரத்தினம் கருத்து வெளியிடுகையில்:**

புதிய புதியரக மோட்டார் சைககிள்களை மக்களுக்கு அறிமுகம் செய்ய இது. போன்ற கண்காட்சிகள் உதவும். கடந்த 2 வருடத்தில் நடைபெறும் மூன்றாவது கண்காட்சி இது. முன்னைய கண்காட்சிகளில் பங்கு கொண்டு நல்ல வரவேற்பைப் பெற்றோம். தொடர்ந்து இத்தகைய கண்காட்சிகள் நடத்தி வர்த்தகர்களாகிய எம்மை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

## ஹட்டன் நஷனல் வங்கி



**வங்கிகள் மூலம் மக்கள் பெறக்கூடிய வசதிகளை விளக்கும் நோக்கில் ஹட்டன் நஷனல் வங்கி காட்சியகம் ஒன்றை ஆரம்பித்து இருந்தது. அந்தப் பிரிவில் பணிபுரிந்த என்.கே.சபேசன் கருத்து வெளியிடுகையில்:**

இத்தகைய கண்காட்சியை ஏற்பாடு செய்ததை வரவேற்கிறோம். வங்கிகள் மூலம் மக்கள என்னென்ன பயன்களைப் பெறமுடியும் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த இக்கண்காட்சி ஓர் அரிய சந்தர்ப்பம்.

## மொறிசன்ஸ் & ஜோன்சன்



**அன்றாடம் வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் ஜெ.எஸ். மொறிசன்ஸ் ஜோன்சன் நிறுவன முகாமையாளர் ரஞ்சித் செனவிரத்தின கருத்துத் தெரிவிக்கையில்:-**

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண்காட்சி ஒன்றில் முதல் தடவையாக இம்முறை பங்குபற்றுகின்றோம். இந்தச் சந்தர்ப்பம் மூலம் எமது உற்பத்திப் பொருள்களின் தரம் குறித்து யாழ். மக்களுக்கு விளக்கவிருக்கின்றோம்.

தலைமயிரிலிருந்து கால் வரையான முழு உடம்பிலும் பயன்படுத்தும் சகல பொருள்களையும் தயாரித்து வழங்குகின்றோம். சர்வதேச தரம் உள்ள எமது உற்பத்திப் பொருள்கள் குடாநாட்டில் முகவர்கள் மூலம் மக்களுக்குக் கிடைக்கின்றன. அந்தப் பொருள்களின் தரம் பயன்பாடு குறித்து மக்களுக்கு இங்கு விளக்குகிறோம்.

## ஈ.ரி.ஏ.லங்கா



**நெல் மற்றும் மரக்கறி வகைகள் போன்றவற்றுக்கான உரங்களை உற்பத்தி செய்யும் ஈ.ரி.ஏ (லங்கா) பிறைவேட் நிறுவனத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் ரீ.ஆர்.ஆப்டீன் கருத்துக் கூறுகையில்:-**

எமது நிறுவனம் சர்வதேச தொடர்புகளைக் கொண்டது எமது நிறுவனம் மூலம் உற்பத்தி செய்யப்படும் உரம் குடாநாட்டு மக்களுக்கு ஏறகனவே கிடைக்கின்றது. அந்த உரங்களின் தரம், அவற்றின் பயன்பாடு தொடர்பாக விளக்கம் அளிக்க இக்கண்காட்சியைப் பயன்படுத்துகின்றோம். 26 நாடுகளில் கிளைகளைக் கொண்ட எமது நிறுவனத்தின் உற்பத்திகள் குடாநாட்டு விவசாய அபிவிருத்திக்கு ஊக்கம் கொடுப்பன. அவை குறித்து மக்கள் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

## ஊறுகாய் உற்பத்தி நிறுவனம்



**சுழிபுரம் மூளாயில் இயங்கும் ஜாம், ஊறுகாய், பிஸ்கட் உற்பத்தி நிறுவனத்தின் பொறுப்பாளர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-**

உள்ளூரில் சிறுகைத்தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கவேண்டியது அவசியம். அந்த வகையில் இக்கண்காட்சி எமக்கு உதவுமென நம்புகிறோம்.

எமது உற்பத்திகளில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி நல்ல தரமானவையாக அவற்றை உற்பத்திசெய்ய இக்கண்காட்சி உதவும் அத்துடன், அந்தப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பும் கிட்டும். அத்துடன், இதுபோன்ற உற்பத்திகளை ஏனைய மக்களும் ஆரம்பிக்க ஊக்குவிக்கும் வகையிலான பரப்புரை செய்வதற்கும் இக்கண்காட்சியைப் பயன்படுத்துகின்றோம்.

## சிங்கர்




**சிங்கர் நிறுவனத்தின் யாழ். கிளை முகாமையாளர் செல்வி இராசநாயகமும் அந்த நிறுவன அதிகாரியான எஸ்.சிவமயூரனும் இப்படிக் கூறுகிறார்கள்:**

தெற்கில் புதிதாக அறிமுகமாகும் தொழில்நுட்பத்தை யாழ். மக்கள் அறிந்திட நல்ல வாய்ப்பாக இக்கண்காட்சி அமைந்துள்ளது. கொழும்பில் கிடைக்கும் பொருள்கள் இங்கு கிடைப்பதில்லையே என்ற அவர்களின் ஏக்கம் இன்று நிறைவேறுகின்றது. கொழும்பு வர்த்தகத்துறையில் யாழ். வர்த்தகர்களுக்கு வாய்ப்புக்கிட்டுவதில்லை என்ற நிலை கண்காட்சி மூலம் நீங்குகின்றது. கொழும்பு வர்த்தகத்துடன் சேர்ந்து யாழ். வர்த்தகர்களும் தமது துறையை விருத்திசெய்ய இக்கண்காட்சி உதவும். கொழும்பில் அறிமுகமாகும் தொழில்நுட்பத் துறையில் வடபகுதி புறக்கணிக்கப்படுவதாக் கூறப்பட்டு வந்த குற்றச்சாட்டுகள் இக்கண்காட்சி மூலம் நீங்கிவிடும்.

## சேரன் வாணிபம்



**வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு காலடி எடுத்துவைத்துள்ள சேரன் வாணிபம் தனது காட்சியகம் ஒன்றைத் திறந்துள்ளது. அந்த நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் எஸ்.ஜெயசீலன் கருத்து வெளியிடுகையில்:**

கடந்த கால யுத்தம் ஓய்ந்து சமாதானச் சூழல் நிலவும் இக்காலத்தில் சேரன் வாணிபம் தனது உற்பத்திகளைக் காட்சிப்படுத்த இந்தக் கண்காட்சி உதவுகின்றது.

நவீன இயந்திர வசதிகள் கொண்டு தயாரிக்கப்பட்ட நல்லெண்ணெய், தரமான அரிசி; ஐஸ் கிறீம் போன்றவற்றை யாழ். மக்கள் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யாமல் எமது தாயகப் பிரதேசத்துக்கான தேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் தினமும் 50 ஆயிரம் கிலோ அரிசியை உற்பத்திசெய்கின்றோம். நல்லெண்ணெய் கூட விசேட இயந்திர வசதிகளுடன் உற்பத்திசெய்கிறோம். இந்தப் பொருள்களை இங்கு காட்சிக்கு வைத்துள்ளோம்.

## சுன்னாகம் ஈ.யு.ரி



**நவீன உருக்குத்தளபாடங்களை உருவாக்கும் கைத்தொழிலை ஆரம்பித்து முத்திரை பதித்து வருகின்றது சுன்னாகம் ஈ.யு.ரி நிறுவனம். இந்த நிறுவனம் தனது உற்பத்திப் பொருள்களைக் காட்சிக்கு வைத்துள்ளது. அதன் பொறுப்பாளர் ஜெயமுகுந்தன் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:**

கடந்த 2 வருடங்களாகச் செயற்பட்டுவரும் எமது நிறுவனத்துக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உண்டு. எமது உற்பத்திகளின் தரத்தை மக்கள் அறிந்திட இக்கண்காட்சியை பயன்படுத்தவிருக்கின்றோம். எமது உற்பத்திக்கு ஊக்கமளிப்பதாக இக்கண்காட்சி அமைகின்றது.

## அண்ணா நிறுவனம்



**அண்ணா நிறுவன உரிமையாளர் எஸ்.நடராசா கருத்துத் தெரிவிக்கையில்:**

உள்ளூர் உற்பத்தியாளர்கள் கண்காட்சியில் குறைவு. தெற்கு உற்பத்தியாளர்களே அதிகளவில் பங்குபற்றுகின்றனர். உற்பத்திகளில் ஈடுபடுவதற்கு ஊககம் அளிக்க வேண்டியது அவசியம். பல உள்ளூர் நிறுவனங்கள் மீள ஆரம்பிக்க விரும்புகின்றன. அவற்றுக்கு வசதிகள் கிட்டவில்லை. உள்ளூர் உற்பத்தியாளர்களை கண்காட்சி மூலம் ஊக்குவிப்பதோடு அவர்கள் தமது தொழில்களை ஆரம்பிக்கவும் பலதரப்பட்ட வழியில் ஊக்கம் அளிக்க வேண்டும்.

## ஐ.ஐ.எஸ். நிறுவனம்



**கணனித் துறையில் பணியாற்றி வரும் ஐ.ஐ.எஸ். நிறுவனமும் காட்சியகம் ஒன்றை திறந்திருந்தது. அந்த நிறுவனத தின் இயக்குநர் கே.வீக்கினேஸ் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-**

இலங்கையின ஏனைய பகுதிகளில் உற்பத்தியாகும், விற்பனையாகும் பொருள்களின் விவரங்களையும் அவற்றின் தரங்களையும் அறிய இக்கண்காட்சி உதவும். அந்தப் பிரதேசத்தின் சந்தை நிலையையும் மக்கள் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

குறுகிய காலத்தில் ஒருவர் கணனிப் பட்டதாரியாக எப்படி வரலாம் என்பது குறித்த விளக்கத்தை அளிக்கின்றோம். லண்டன் நிறுவனம் ஒன்று அறிமுகம் செய்துள்ள உயர்தொழில் டிப்ளோமா கற்கைநெறி தொடர்பான விளக்கத்தை இங்கு மக்களுக்கு வழங்கிவருகின்றோம். மிகச் சுலபமான முறையில் சுமார் இரண்டரை வருட காலத்துக்குள் ஒருவர் பட்டதாரியாவதுடன் வேலைவாய்ப்பையும் சுலபமாகப் பெற வாய்ப்பு உண்டு. அது பற்றிய விளக்கத்தை பொதுமக்களுக்கும் குறிப்பாக இளைய தலைமுறையினருக்கும் வழங்க இக்கண்காட்சியை பயன்படுத்துகின்றோம்.

## யாழ். எலக்ரிக்கல்ஸ்



**யாழ்ப்பாணத்தில் மின் உற்பத்தி பொருள்களின் முகவரா கப் பணியாற்றும் யாழ்ப்பாணம் எலக்ரிக்கல் நிறுவனமும் காட்சியகத்தைத் திறந்துள்ளது.**

அந்நிறுவனத்தின் பொறுப்பாளர் மகேஸ்வரன் மதீசன் கருத்து வெளியிடுகையில் - கொழும்பு நிறுவனங்களின் முகவர்களாக நாம் செயற்

(14ஆம் பக்கம் பார்க்க)

# திருமண வாழ்த்து

இன்று (28.08.2004) சனிக்கிழமை வல்வெட்டித்துறை ஆதிவைரவர் தேவஸ்தானத்தில் இல்லறமாம் நல்லற வாழ் வெனும் இனிய திருமணபந்தத்தில் இணையும்.

திருவளர் செல்வன்
**சண்முகதாஸ் (தாஸ்)**
B.Com. (Hons)
அவர்களையும்

திருவளர் செல்வி
**ஜெயமாலினி (முல்லை)**
அவர்களையும்

சகல சௌபாக்கியங்களையும் பெற்று இறைவனின் ஆசியையும், பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் இன்புற்று வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை
இணைபிரியா நண்பர்கள்
வல்வெட்டித்துறை. ஜெரோம், சிவபாலன்.
(35665)(30-13-17)



## ADMINISTRATIVE SECRETARY

An Established Company in Jaffna looks for a dynami , energetic and experienced person for the post of Administrative Secretary. He should be capable of co-ordinating functions of the various sections of the concern and execute the functions rapidly. Should have high command both in English and Tamil.

Appilcants with experience in the same capacity will be given preference.

Age limit :- Under 45 years.
Salary :- Negotiable

Call in for a Walk in interview at 10.00A.M on Sunday the 29th and Monday The 30th at UTHAYAN AUDITORIUM, 361, Kasthuriyar Rcad, Jaffna. (c-37225)


## நீங்காத நினைவினில்
## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 11 1939 — உதிர்வு 28 08 1998



அமரர்
## பொன்னையா தியாகராசா
(சாலைப் பரிசோதகர் இ.போ.ச.
கிளிநொச்சி - பருத்தித்துறை சாலைகள்).

ஆண்டுகள் ஆறானாலும் ஆறுமா எம் துயரம்?
விருட்சம் தேடி வையத்துள் விழுதுகள் தவிக்கின்றோம்
வீட்டினிலே நீங்கள் இருப்பீர்கள் என்று நாம் ஓடிவர
வீதியிலே எமையணைக்க காத்திருக்கும் அப்பாவே!
அன்போடு எமை வளர்த்த அன்புத் தெய்வமே!
பண்போடு எமை வளர்த்த பாசத்தின் சிகரமே!
பாதியிலே எமைவிட்டுப் பறந்துபோனதெங்கோ?
பாலகர் நாம் தேடுகின்றோம்
இன்னும் பாராமல் இருப்பதேனோ?
இதயத்துடிப்பு அது டப, டப், அல்ல அப்பா
அது அப்பா, அப்பா என்றே
அனுதினமும் துடிக்கின்றது
உடலை மெழுகாக்கி ஒளி தந்த தூயவரே!
ஒளிகொண்டு தேடுகின்றோம் உங்கள் முகம் காணவில்லை!
ஆறு ஆண்டுகளாய் உங்களை நினைத்து வாடும் நாம்
உங்கள் அன்புப் பாதம் தனில் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

இன்றும் நினைவுகூரும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.
சகோதரர், உற்றார், உறவினர்.

இல. 05, புறுடி முன்லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(35768) (40-13-17-30)

# சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடத்திவரும் மாதாந்தக்கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் 'வடக்கு - கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்குப் பொருத்தமான தந்திரோபாயம்' என்னும் கருப்பொருளில் பொருளியற்துறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தம கருத்துரை வழங்குவார்.

அதனையடுத்து துறைசார்ந்தோர், ஆர்வலர்கள், மாணவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலும் இடம்பெறும்.

சமூக விஞ்ஞானத் துறைகளில் கற்கும் மாணவர்கள், சமூகவிஞ்ஞான ஆர்வலர்கள், அபிவிருத்தித்திட்டமிடலாளர்கள், நிர்வாகத் துறைசார்ந்தோர் இதில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைக்குமாறு அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# சிறுவர்கள் ஒப்படைப்பு

வவுனியா,ஓக.28

புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற இரண்டு சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் இவர்களை ஒப்படைத்தனர்.

இந்நிகழ்வு கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட அரசியல்துறைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் சிறுவர்களை 'யுனிசெவ்' பிரதிநிதிகள் முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைத்தார். (ஐ-164-7)

# களியாட்ட நிலையமாக மாறிவரும் கடைத்தொகுதி

தென்மராட்சி,ஓக.28

கடைத்தொகுதிக்கெனக் கட்டப்பட்ட கட்டடம் மதுப்பிரியர்களின் களியாட்ட நிலையமாக மாறியுள்ளது.

கொடிகாமம் நகரப்பகுதியில் புனர்வாழ்வு அமைச்சினால் 43 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ள கட்டடத்திலேயே மேற்படி நிலை காணப்படுகிறது.

ஐந்து கடைகள் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதி கதவுகள் போடப்படாத நிலையில் உள்ளது.

இக்கடைத்தொகுதியை அண்டிய பகுதியில் மதுபான நிலையம் அமைந்துள்ளதால் இந்தக்கட்டடத்தினை மது அருந்தும் நிலையமாகப் பயன்படுத்தும் மதுப்பிரியர்கள் கட்டடங்களை அசிங்கப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-117)

# அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஓக.28

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ் பலாலி வீதியிலுள்ள இந்துப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரினபநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன. இந்த முற்றோதல் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையினரும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரும் கேட்டுள்ளனர். (எ)

# குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.28

பருத்தித்துறை வீதி, கிடாய் விழுந்தான் ஒழுங்கையில் உள்ள (முதலாம் ஒழுங்கை) மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள சுமார் 30குடும்பங்களும் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து குடிதண்ணீர் வசதியின்றி சிரமப்பட்டு வந்தன. யாழ. நகர் கிழக்கு கிராம அலுவலர் க.நித்தியானந்தன் மேற்கொண்ட முயற்சியினால் தற்போது இப்பகுதிக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாநகரசபை துரிதப்படுத்தியுள்ளது.

இந்த ஒழுங்கையில் படையினர் ஏற்படுத்தியிருந்த தடைகளும் அகற்றப்பட்டு தண்ணீர்க் குழாய்கள் பொருத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (9)

# கோப்பாய் ஆஸ்பத்திரி சிரமதானம் மூலம் துப்புரவு

கோப்பாய்,ஓக.28

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் கோபபாய் பிரதேச சமுர்த்தி ஆளணியினராலும், கோபபாய் மத்தி, வடக்கு கிராம அலுவலர்களினாலும் இப்பிரதேசப் பொதுமக்களின் உதவியோடு சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. (எ-72)


# INVITATION

The Director and Staff of the **IBMS** Cordially invite our Patron, well wishers, friends, Parents and students to the **Awards ceremony** celebration at the Navalar Hall Jaffna on Sunday, 29 th August 2004 at 9.30 a.m.

Thanking you.

**Institute of Business Management Studies**
**#410, K.K.S. Road,**
**Jaffna.**
(c/37285)(40-13-17-30)



## YMCA Jaffna

அங்கத்தவருக்கான உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள்.
★ Badminton ★ Carrom
★ Chees ★ Table Tennis

விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். போட்டிகளுக்கான விண்ணப்பமுடிவுதிகதி 13.09.2004.

**பொதுச்செயலாளர்,**
YMCA Jaffna. (C/37268)(35-13-17-30)


# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சோ.சுப்பிரமணியக்குருக்கள் (சின்னராசா ஐயர்) 25.08.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் வரதராஜசர்மா (கோண்டாவில்), ஜெகௌரி (வவுனியா), மாலதி (கோண்டாவில்), புஸ்பமாலா (ஜேர்மனி), பத்மராஜன் (ஆசிரியர், வவுனியா மகாவித்தியாலயம்), வாசுதேவன் (வவுனியா சிவன்கோவில்), கிருபாகரன் (ஜேர்மனி), சசிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாமதி (கோண்டாவில்), ஜெயந்திநாதக்குருக்கள் (நந்தாவில்), கிருஸ்ணமூர்த்தி ஐயர் (கோண்டாவில்), சோமசுந்தரசர்மா (ஜேர்மனி), ஜெயந்தினி (ஆசிரியை, வவுனியா), ஹேமலதா (வவுனியா), சசிரேகா (ஜேர்மனி), அபர்ணா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சுதரிமன், சுரபி, கௌரிநாதன், கஜவதன், சாலினி, ஸ்ரீராம், கோகுலவதன், மதுரா, சாயிராம், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (26.08.2004) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (35761)(35-13-17-30)

## திருமதி இராஜேஸ்வரி சோதிரட்ணம்



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சோதிரட்ணம் அவர்கள் 26.08.2004 வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி - இராசம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து தம்பதிகளின் மருமகளும் செ.சோதிரட்ணம் (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், தமயந்தி, வசந்திரா (ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி), வசுமதி, சர்வானந்தன் (Cell Tell, Colombo), அனுஷியா (மானிப்பாய் பல நோ.கூ.சங்கம்), நந்தினி (கனடா), கிருபானந்தன் (மானிப்பாய் பல நோ.கூ.சங்கம்), மஞ்சுளா (Supper Accounting Branch, Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரியின் அன்புச் சகோதரியும் லயன் சிவராஜீஸ்வரன் (அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்திச் சபை ஒப்பந்தகாரர்), ஜெசிந்தா (கொழும்பு), சிவபுண்ணியம் (கனடா), லதா (ஆசிரியை, மயிலிட்டி றோ.க.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும், கலா, நிரோஜன் (சென்ஜோன் ஸ் கல்லூரி), ஷர்மிளா (பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை), ஷர்மிஸ்தா (கனடா), தனுராஜ் (கனடா), கஜலக்ஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், பஞ்சரட்ணம், யோகரட்ணம், துரைரட்ணம், பாலரட்ணம், திரவியம் மற்றும் திலகவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.08.2004) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணயளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆரியம்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அரசடிச் சந்தி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.* (35767)(30-13-17) குடும்பத்தினர்.

## திருமதி திருநாவுக்கரசு நேசமலர்



சங்கரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு நேசமலர் 25.08.2004 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரியும், கஜேந்திரன், ஜெயந்தா (கனடா), சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாக்கியம, காலஞ்சென்ற பத்மநாதன் குலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், ஜனந்திரன் (சுவிஸ்), சிறீதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாளினியின் சிறிய தாயாரும், வைஸ்ணவி (கனடா), சஜீவன், சாதுகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-08-2004) சனிக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*
T.P: 0712514268, 0777180705 (35769) (15-13-17-30)
கஜேந்திரன் (கஜன்),
சுரேந்திரன் (சுரேஸ்).


உ

# தம்பசிட்டி மாயக்கை சித்திவிநாயகர் ஆலய

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்

## 28.08.2004







## ஆலயப் பூசகரின் ஆசி

தான்தோன்றியாய்த் தோன்றி சிந்திப்போர்க்கெல்லாம் காரிய சித்திகளை வழங்கும் தம்பசிட்டி மாயக்கையம்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் இன்று ஆவணி 12ஆம் நாள் (28.08.2004) சனிக்கிழமை சித்திரத்தேரேறி வந்திப்போர்க்கு திருவருள் பாலிக்க வருகின்றார்.

ஐந்தானை முகத்தோடு காட்சியளிக்கும் ஐங்கரப்பெருமான் அடியார்கள் அனைவருக்கும் அருளை அள்ளி வழங்குகின்றார்.

அத்தருணம் அடியவர் எல்லோரும் வந்து எம்பெருமானைத் தரிசித்து திருவருளைப் பெற்றுக் கொள்ளும்வண்ணம் ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ ம.ச.வேதாரண்யக் குருக்கள்
- ஆலய பரம்பரைப் பூசகர் -

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசி

விநாயகப்பெருமானை முதற்கண் வணங்கியே எக்கருமத்தையும் தொடங்குவது வழக்கமாகும். விநாயகருக்கு இன்னொரு பெயர் கணபதி. கணபதியை முழுமுதற் கடவுளாகத் தொழும் ஒரு சமயப் பிரிவு இந்து மதத்தில் உண்டு. இதனை "காணபத்தியம்" என்பார்கள். விநாயகர் தமக்கு விஞ்சிய ஆற்றல் படைத்தவர் வேறொருவரும் இல்லாமையால் அவருக்கு "விநாயகர்" என்று பெயர் ஏற்பட்டது. யானை முகத்தை உடையவராதலால் "கஜமுகன்" எனப்பட்டார். கணங்களுக்குத் தலைவராதலால் "கணபதி" என்றும் தம்மை நினைப்பவர்களுக்கு விக்கினங்களைப் போக்குவதால் "விக்கினேஸ்வரன்" என்றும் மோதகத்தில் விருப்பம் உடையவராதலால் "மோதகப் பிரியர்" என்றும் அழைக்கப்படுகின்றார். அறிவுக்குப் புலனாகக் கூடிய பிரபஞ்சங்களை எல்லாம் உண்டு தம்முள் அடக்கக்கூடிய பெரிய வயிற்றினை உடையவராதலால் அவர் "லம்போதரர்" எனப்படுவார். மூஷிகத்தை ( எலியை) வாகனமாகக் கொண்ட காரணத்தால் அவர் "மூஷிகவாகனன்" எனவும் அழைக்கப்படுவர். தம்பசிட்டி மாயக்கை பஞ்சமுக விநாயகர் ரதம் ஏறி இப்பகுதி மக்களுக்கு பலவகை சித்திகளை அருளி வாழ வைக்க வேண்டுமென விநாயகரின் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோம்.

மஹோற்சவ பிரதமகுரு
'சாதக இளவரசு'
சிவஸ்ரீ சுந்தரராஜ ஸ்ரீரங்கநாதக்குருக்கள்

தொல்புரம் வழக்கம்பரை
அம்மன் கோயில் தேவஸ்தானம்.

**தேர்வடம் பிடித்தால்**
**இறையுலகில்**
**ஓர் இடம் பிடிக்கலாம்**

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் பாணன் குடியிருப்பு, குறநங்கை வாழி, மாலிசந்தை, அல்வாய், வியாபாரிமூலை, தம்பசெட்டி ஆகிய இடங்களுக்கு நடுவனாக இருப்பது மாயக்கை என்னும் நீர்த்தேக்கம் கொண் டுள்ள பகுதியாம். இங்கு மிதமிஞ்சிய வெள்ளம் இப் பகுதியில் தெற்கேயுள்ள குகையினுள் சென்று மறைவ தாலும் மிகப் பழையகாலத்தில் இயக்கர் என்னுமோர் இனத்தினர் இக்குகையினுள் வாழ்ந்து பல மாயங் களைச் செய்து வந்ததனாலும் இக்குகை இருந்த பிரதேசம் மாயக்குகை என்ற பெயரால் அழைக்கப் பெறறது. இப்பெயரானது காலப்போக்கில் "மாயக்கை" என மருவி வழங்கப்படுகின்றது.

சிவன் எழுவை என்னும் நிலத்தில் பழைமை வாய்ந்த சிவாலயம் அவ்வூரில் தலமாக விளங்கியது. ஆலயத்தைத் தம்பசிட்டியில் வாழ்ந்து வந்த ஐயன் பிரிவினர் என்றழைக்கப்படும் பகுதியினர் பரிபாலனம் செய்தனர். இந்த ஐயன் பகுதியின் ஆசாரசீலர்களாக வாழ்ந்து வந்தமையால் இவர்கள் ஐயன் பிரிவினர் என்றழைக் கப்பட்டனர். போர்த்துக்கேயர் எமது நாட்டைக் கைப்பற்றியபோது இச்சிவாலயம் அழிக்கப்பட்டு அங்குள்ள விக்கிரகங்களை சூறையாடிச்செல்லும் போது அவ்விக்கிரகங்களில் ஒன்றாகிய விநாயகர் திருவுருவம் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாது மாயமாக மறைந்து நிலத்தில் புதையுண்டது. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சி இறுதியில் சிவாலயம் இருந்த இடத்திற்கு கிழக்கே சிறிதுதூரத்தில் தினை பயிரிடப் படும் புன்செய் நிலத்தின் சொந்தக்காரரும் ஐயன் பிரிவைச் சேர்ந்த சிவபூஜா துரந்தரும் ஆகிய நீலப் பிள்ளை என்பவர் அந்நிலத்தில் நீர்பாய்ச்சும்போது தினைப்பயிரின் உள்ளே ஒளிமயமாக அந்த விநாயகர் திருவுருவம் திடீர் எனத் தோற்றம் அளிப்பதைக் கண்டு மனமுருகிநின்று வணங்கிப் பின்னர் அவ்விடத்தில் குடில் அமைத்து விநாயகப்பெருமானை வழிபாடு செய்து வந்தார். ★

## ஆசிச் செய்தி

வினைதீர்க்கும் விக்கின விநாயகர் வயல்சூழ்ந்த தம்பசெட்டி, மாயக்கை பதியிலே தொன்று தொட்டு எமக்கெல்லாம், வாக்கு, நல்மனம், நோயின்மை, முத்தமிழ் எல்லாம் தந்து கருணாநிதிப் பெருமான் வித்தக விநாயகன் ஆன்ம கோடிகள் தம்மை மனத்தால் சிந்தித்து, வாக்கால் வாழ்த்தி, காயத்தால் வழிபாடுசெய்யும் பொருட்டு ரதம் ஏறுகின்றார். பஞ்சமுக விநாயகரின் பொன்னான திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக.

கிரியா சிரோன்மணி
சிவஸ்ரீ சி.மகேந்திரநாதக் குருக்கள்
ஆலய பிரதமகுரு

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

இன்று தம்பசிட்டி, மாயக்கையம்பதி ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானுக்கு ரதோற்சவம் நடைபெறும் நன்னாளாகும். வரம்கேட்டு வழிபடுபவர்க்கெல்லாம் காரிய சித்திகளை அளிக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் இன்று தேரேறிவந்து அருட்காட்சி நல்கும் திருநாள். வழபடும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்க' இன்பவாழ்வளிக்கும் விநாயகப் பெருமான் மாயக் கையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான். இன்று நடைபெறும் தேர்விழாவில் வடம்பிடித்து இழுக்கும் அன்பர்களின் வினைநீக்கி முத்திப்பேற்றை அளிக்கவல்ல விநாயகப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றுவது நமது தலையாய கடமை. இனியாவது மக்கள் எல்லோரும் போர் ஓய்ந்து சமாதானமடைந்து சச்சரவுகள் நீங்கி சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழவேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம்பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள
நல்லை ஆதீன முதல்வர், 2 ஆவது குருமஹாசந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## ஆலய தர்மகர்த்தாவின் ஆசி

அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை நெஞ்சக்கரத்தின் நிலையறிவித்துத் தத்துவ நிலையைத் தந்து எமை ஆண்டுஅருளும்படி ரதம் ஏறும் பஞ்சமுகவிநாயகன் விரைகழல் பணிவோம்.

கா.கணேசமூர்த்தி
ஆலய தர்மகர்த்தா

**மலரமைப்பு**
**ஆலய பரிபாலன சபை**

(சி372778)(34-13)

# TAV தொழில்நுட்பக்கல்வி

சுவிஸில் 1998 இல் இருந்து தமிழ்மொழியில் தொழிற் கல்வியை வழங்கி இதனூடாக தமிழர் பலர் வேலைவாய்ப்பைப் பெற வழிவகுத்த ஒரே நிறுவனம் TAV ஆகும். சுவிஸிலுள்ள தொழிற்பயிற்சி வழங்கும் இந்நிலையமானது ABB, ALSTOM போன்ற பெரிய தொழிற்சாலைகளை அங்கத்தவராக இணைத்து மேலும் சுவிஸில் 100 இற்கும் மேற்பட்ட தொழில்நிறுவனங்களை அங்கத்தவராகவும் கொண்ட பயிற்சி நிலையமாகும். எமது நேரடியான தமிழ்மொழி விளக்கத்துடன் நடைபெறும் பயிற்சியானது மிகப் பெறுமதிமிக்க உயர் வைத்தரவல்லது.

**தொழில்நுட்பக் கல்வி கற்கைநெறி**

* CNC Programmer (புரோகிராமர்)/ Manufacturing Engineer
* Technician

**கற்கைநெறிக்கான தகைமை:**
க.பொ.த.(சா.த.) பரீட்சைச் சித்தியுடன் கணிதபாடத்தில் சிறப்புச்சித்தி.

**வயதெல்லை: 18-33**

**விண்ணப்ப முடிவுதிகதி: 15.09.2004**

விண்ணப்பத்தை சுயவிவரத்துடன் தேசிய அடையாள அட்டைப் பிரதியையும் தெளிவான முகவரியுடன் அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சையில் கடந்த 6வருட பயிற்சி விவரம் காண்பிக்கப்பட்டு இக்கல்வி உங்களுக்கு உயர்வைத் தரவல்லதா என சுயமாகத் தீர்மானிக்கவும். வேலை வாய்ப்பு, சுயதொழில் ஆரம்பித்தல் போன்ற விடயங்களுக்கு விளக்கமும் அளிக்கப்படும்.

விண்ணப்ப முகவரி:
TAV,
Salzweg 1, 8048
Zurich, Switzerland.

தொடர்புகளுக்கு:
செல்வசிவபரன்
Tel 0041+1430 3074
079/712 37 46,
தொலைநகல் Fax: 01 430 31 44

தொடர்புகளுக்கு:
திரு.கே.சத்தியசீலன்
லக்ஷன் போட்டோ அன் வீடியோ
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777 917703 (35717)


## அச்சு உடைந்து துலா வீழ்ந்து காயம்

அச்சு உடைந்து வீழ்ந்த துலா வயோதிபரின காலைப் பதம்பார்த்தது.

கடந்த புதன்கிழமை வரணி, இடைக்குறிச்சியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (வயது 75) என்பவரே காயமடைந்தவராவார். அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தோட்டத்திற்கு கிணற்றிலிருந்து நீர் இறைத்துக்கொண்டிருந்த வேளையில் துலா வீழ்ந்து கால்பாதத்தைத் தாக்கிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (9-117)

## செயல்முறைப்பரீட்சை

பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களின் செயல்முறைப் பேச்சுப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறும் என கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (எ)

## மினிபஸ் தடம் புரண்டது

பருத்தித்துறை வீதியில், கோப்பாய் கிறிஸ்தவகல்லூரிக்குச் சமீபமாக கடந்த புதன் மாலையில் மினிபஸ் ஒன்று தடம் புரண்டது.

தெய்வாதீனமாக பயணிகள் எவருக்கும உயிராபத்து ஏற்படவில்லை. சிலருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டன. வாகனத்தின் கண்ணாடிகள் நொறுங்கிவிட்டன. (ஐ-72)


# பாலின் விலை அதிகரிப்பு

**எமது சங்கம் 01.09.2004ஆம் திகதியிலிருந்து 1லீற்றர் பாலின் விற்பனை விலை ரூபா 26/= ஆக அதிகரித்துள்ளது.**

**தற்போதைய விநியோகச் செலவினங்கள் அதிகரிப்புக் காரணமாக இவ்விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(C-37279)(35-40-16-13)




ஜப்பான்
நிறுவனத்தின்
தொழில் நுட்பத்துடன்
கூடிய நஷனல் பனசோனிக்

சக்தி மிக்கது உறுதியானது

* ஆகஸ்ட் 27முதல் 29 வரை யாழ் மத்திய கல்லூரியில் எங்கள் காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள்.
* பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச அன்பளிப்புகள்.

பத்து கோடி மக்களின் விசுவாசத்தைப் பெற்றது.

இந்தியாவில் 55% பாவனைக்கு பயன்படுத்தப்படுகின்றது.


**FAIZAL HARDWARE STORES**
74, Dam Street, Colombo 12,
Tel: 94 11 2433727, 2423273, 2384250-4 Fax: 94 11 2446088 E-mail:faisto@sri.lanka.net

SUDAROLI GRAPHICS


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

29-08-2004

கனடாவில் வசிக்கும்
திவாகரன் - தர்சினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன் **தினேஸ்**
தனது முதலாவது பிறந்த தினத்தை நாளை (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை கனடாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். தினேஸ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அக்காமார், கரவெட்டியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சின்னமாமி, கனடாவில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சுவிஸில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள் அனைவரும் கரவெட்டி அந்திரான் முருகன் அருளால் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.




'மங்களகிரி'
கரவெட்டி.

தகவல்:
சி.கந்தசாமி
(அப்பப்பா)

செல்வன்
# தி.தினேஸ்

(35713)(34-40-13-16)

உ

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணித் திங்கள் 12ஆம் நாள் (28.08.2004) சனிக்கிழமை முற்பகல் 11.55 மணிமுதல் 1.20 மணிவரையுமுள்ள திருவோண நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் சித்தயோகமும் கூடிவரும் சுபமுகூர்த்த நல்வேளையில்--

திரு.திருமதி பரராசவீருந்தம்
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**விநோதன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி துரைராசா
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**அருட்செல்வி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுத் திருமணம் பிரான்ஸில் நடைபெறுகின்றதென்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்வதுடன் -

இத்திருமண வைபவத்தை முன்னிட்டு கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தில் மணமக்களை வாழ்த்தி நடைபெறும் அபிஷேகத்திலும் விருந்துபசாரத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காவில்,
கரணவாய்.

(35695)(42-40-13-16)

திரு.க.பரராசவீருந்தம் (அப்பா),
திருமதி ப.சாரதா (அம்மா),
செல்வன் விஜிதன் (தம்பி).

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
1931 - 06 - 11



மறைவு
2004 - 07 - 31

## அமரர் மாணிக்கம் தெய்வேந்திரம்

பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
திகழ்ந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் வாழ்விற்கு நல்வழி காட்டி
வாழ்வாங்கு வாழ வைத்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் இன்னுயிரை ஒரு நொடியில்
காலனவன் கவர்ந்தானோ
மாதம் ஒன்றல்ல ஓராயிரம் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டகலா!

நாளை மறுதினம் (30-08-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதோடு எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டும், துயர்பகிர்ந்தவர்களுக்கும் சகலவிதமான உதவிகளையும் வழங்கிய அனைவருக்கும் அஞ்சலி செலுத்திய சனசமூக நிலையங்களுக்கும் மக்களுக்கும் உளமார்ந்த எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
சுதுமலை தெற்கு,
குருந்தடி பிள்ளையார் கோயில்,
மானிப்பாய். (35733)(26-16-13-40)

நிரந்தர முகவரி:
திடற்புலம், வயாவிளான்.

# சேமிப்புக் கடன் குழுவின் கட்டடம் திறந்துவைப்பு

விசுவமடு பிரதேசத்திலுள்ள விசுவமடு விநாயகர் சேமிப்பு கடன் வழங்கும் குழுவினால் விசுவமடு மேற்கில் புதிதாக அமைக்கப்பட்ட சேமிப்பு கடன்வழங்கும் கட்டடம் கடந்த 22ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

சேமிப்புக் குழுத் தலைவி பா. கோகிலா தலைமையில் திறப்புவிழா நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரினை விசுவமடு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தராசாவும் தமிழீழ தேசியக் கொடியை விசுவமடு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பு.திலகனும் ஏற்றிவைத்தனர்.

விநாயகர் சேமிப்பு கடன்குழுக் கொடியை கெயர் நிறுவன பிரதிநிதி ம.சிவாஜினி ஏற்றிவைத்தார். பெயர்ப் பலகையை மூங்கிலாறு சமூக, பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த அகிலன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

புதிய கட்டடத்தினை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்துரைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா மற்றும் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் ஆகியோர் வழங்கினர். (4352)

## உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவப் போட்டி

வட்டக்கச்சி,ஓக.27

வடக்குக் கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினரால் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையேயான முகாமைத்துவப் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மாவட்ட மட்டப் போட்டிகள் கடந்த 15 ஆம் திகதிமுதல் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் அவற்றில் முதலிடம் பெறும் மன்றங்களுக்கிடையேயான போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 15ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான மதிப்பீடுகளை மேற்கொளளும் குழுவினர் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சென்று அங்குள்ள நடைமுறைகளையும் ஒழுங்குகளையும் மதிப்பீடுசெய்து புள்ளி வழங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(4-405)




## மாங்குளம் பிரதேச கமக்காரர் சங்கமம்

ஒட்டுசுட்டான், ஓக.28

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பிரதேச கமக்கார அமைப்புகளின் சங்கம நிகழ்வு கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாங்குளம் கமக்கார அமைப்புத் தலைவர் சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈகச் சுடரினை மாவீரர் அருச்சுனாவின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார்.

அரங்கின் மங்கள விளக்கினை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கமநல உதவி ஆணையாளர் தர்மலிங்கம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந.செல்வராசா, முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் பூங்குன்றன் ஆகியோர் ஏற்றினர். வரவேற்புரையினை மாங்குளம் கமக்கார அமைப்புச் செயலர் பஞ்சலிங்கம் நிகழ்த்தினார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து கருத்துரைகளை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் பூங்குன்றன், விவசாய உதவி ஆணையாளர் ஆகியோர் ஆற்றினர்.

சிறப்புரையினைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகாலன் நிகழ்த்தினார். நன்றியுரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் வே.தயா ஆற்றினார். இறுதியாக தச்சடம்பன் கிராமத்தில் மாற்றுப் பயிர்ச்செய்கைத் திட்டத்தினை மேற்கொண்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக விசேட பரிசில்களும் கமக்கார அமைப்பினரால் வழங்கப்பட்டன. (4-341)



## சிலாவத்தை தமிழ்வித்தியாலய சாரணர்களின் பாசறை நிகழ்வு

ஒட்டுசுட்டான்,ஓக.28

முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ்வித்தியாலய சாரண மாணவர்களின் தீப் பாசறை நிகழ்வு கடந்த வாரத்தில் சிலாவத்தை கடற்கரையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.திருக்குமரன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் முல்லை மாவட்ட சாரணியர் இணைப்பாளர் வே.ஜெயபாரதி கலந்துகொண்டார். இதன் ஒழுங்கமைப்புகளை சாரணிய ஆசிரியர்களான ச.வாசுகி, சி.வினோதா ஆகியோர் ஏற்படுத்தியிருந்தனர். (4-341)

## சிறுவர் நலநிதிய கலாசாரப் போட்டிகள்

வட்டக்கச்சி,ஓக.28

இலங்கைத் திருச்சபை சிறுவர் நலநிதியம் வன்னிப் பிரதேசத்தில் உள்ள தனது சிறுவர், சிறுமியர் இல்லங்களிடையே கலாசாரப் போட்டி ஒன்றினை நடத்திவருகின்றது.

இப்போட்டியின் முதல் நிகழ்வாக சதுரங்கம், கரகம் ஆகிய போட்டிகள் கடந்த 21ஆம் திகதி முறிகண்டி தென்னிந்தியத் திருச்சபை பெண்கள் இல்லத்தில் நடைபெற்றன.

நடனப் போட்டி வவுனியா புனித பேதுரு பெண்கள் இல்லத்திலும் கரபந்துப் போட்டி, வலைப்பந்துப் போட்டி ஆகியன செட்டிக்குளம் ஆண்கள் இல்லத்திலும் பூப்பந்துப் போட்டி செட்டிக்குளம் ஆண்கள் இல்லத்திலும் நடைபெற்றன.

சித்திரம், கவிதை, கட்டுரை ஆகிய போட்டிகள் செப்ரெம்பர் 4ஆம் திகதி கிளிநொச்சி புனித பேதுரு பெண்கள் இல்லத்திலும் பேச்சு, தனிப்பாடல், குழுப்பாடல் ஆகிய போட்டிகள் 10ஆம் திகதியும் தனிநடிப்பு, நாடகம் ஆகிய போட்டிகள் 11ஆம் திகதியும் கிளிநொச்சி கருணா நிலையத்தில் நடத்தப்படவுள்ளன. இவற்றுக்கான ஏற்பாடுகளை அந்தந்த நிலைய நிர்வாகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.(4-405)

### தட்டுவன்கொட்டி மக்களுக்கு 'பவுஸர்' மூலம் தண்ணீர்

பரந்தன்,ஓக.28

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆனையிறவு தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீளக் குடியேறிய மக்களுக்கு தண்ணீரை விநியோகித்து வருகின்றது.

கிளிநொச்சியில் இருந்து உழவு இயந்திரத்தில் 'பவுஸர்' மூலம் ஒருநாளுக்கு 5 தடவைகள் வீதம் நீர்வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கிராமத்தில் நடைபெறும் வீடமைப்பு மற்றும் பொதுமண்டபம் அமைத்தல் போன்ற மக்கள் பங்களிப்பு வேலைகளுக்காகத் தங்கிநிற்கும் மக்களுக்கு இந்தத் தண்ணீர் வழங்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன என தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (4-352)

## வட்டக்கச்சி ரங்கநாதர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா

வட்டக்கச்சி, ஓக.28

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

30ஆம் திகதி ஸ்ரீராம அவதாரத் திருவிழாவும் 31ஆம் திகதி இலட்சுமி நாராயணர் திருவிழாவும் அடுத்த மாதம் முதலாம் திகதி அனந்த சயனர் திருவிழாவும் 2ஆம் திகதி அழகிய மணவாளத் திருவிழாவும் 3ஆம் திகதி பகல் மோகினி வடிவத் திருவிழாவும் இரவு ஹரிகர வடிவத் திருவிழாவும் 4ஆம் திகதி கிருஷ்ண அவதாரத் திருவிழாவும் 5ஆம் திகதி பகல் வேட்டைத் திருவிழாவும் மாலை சப்பரத் திருவிழாவும் இரவு 12 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தியும் 6ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மாலை உறியடி உற்சவமும் 7ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 8ஆம் திகதி சங்காபிஷேகமும் 9ஆம் திகதி ஆஞ்சனேயர் உற்சவமும் நடைபெறவுள்ளன.

(4-405)

## கிளிநொச்சி வீட்டுத் திட்டம்; முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

பரந்தன்,ஓக.28

உலக வங்கியின் நிதியீட்டத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பெற்று வரும் வறியமக்களுக்கான வீடமைப்புத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 25 வீடுகளும் பளைப் பிரதேச செயலர் பிரிவில் 25 வீடுகளுமாக மொத்தம் 100வீடுகள் அமைக்கும் வேலைகள் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளும் குறித்த வீடமைப்பு வேலைகளை உலக வங்கியின் நிதியீட்டத்துடன் தாமாகவே முன்னெடுக்கலாம் என்னும் பொதுவான திட்டக்கொள்கை இருந்தும், மிகவும் வறிய நிலையிலும் நலிவுற்றிருந்த மக்களின் மேலான வேண்டுகைகளுக்கு அமைவாகவும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 22 வீடுகளையும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 3வீடுகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்று அமைத்துவருகின்றது.

மக்களின் விருப்பு, துறைசார்ந்தோரின் ஆலோசனை, ஆர்வலர்களின் கருத்துப்பகிர்வு என்பவற்றுடன் கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு வருவதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இத்துரித செயற்பாடுகளுக்குக் கிளிநொச்சி செயலகத்தின் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்துவருவதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-352)

## மாபெரும் ஓவியப் போட்டி

கிளிநொச்சி அரச அதிபர் பணிமனை, கிளிநொச்சி மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை ஆகியவற்றின் அனுசரணையுடன் கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் மாபெரும் ஓவியப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.

இப்போட்டியானது மாணவர்களுக்கான போட்டி, திறந்த போட்டி என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

மாணவர்களுக்கான போட்டி தரம் 5,6,7 ஆகியன முதலாம் பிரிவாகவும் தரம் 8,9,10 ஆகியன இரண்டாம் பிரிவாகவும் தரம் 11,12,13 ஆகியன மூன்றாம் பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. மாணவர்களுக்கான போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களும் திறந்த போட்டியில் மாணவரல்லாத கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் பங்குகொள்ளமுடியும்.

இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தமது ஆக்கங்களைப் பாடசாலை அதிபருடாகவும் திறந்த போட்டியாளர்கள் கிராம சேவையாளருடாகவும் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அதிபர்/செயலாளர், அழகியற் கலாமன்றம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

போட்டியின்போது தெரிவான ஓவியங்களும் ஏனைய அனைவரது பொருத்தமான ஆக்கங்களும் பரிசளிப்பின் போது காட்சிக்கு வைக்கப்படும். எனவே, போட்டியில் கலந்துகொள்ள முடியாதவர்களும் காட்சிக்காக ஆக்கங்களை அனுப்பமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-405)

### 'தாய்மடியின் தாலாட்டு' புதுக்குடியிருப்பில் அறிமுகவிழா

தமிழீழ விடியல் இசைக்குழுவின் 'தாய்மடியின் தாலாட்டு' இசைத்தட்டு, ஒலிப்பேழை அறிமுக விழாவும் இசை நிகழ்வும் கடந்த 22ஆம் திகதி மாலை 4மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றன. இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (4-341)





கரைச்சிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனபாலசிங்கம் ஆகியோர் வட்டக்கச்சி தூயமணி முன்பள்ளிச் சிறுமியர்களின் வரவேற்பு நடனத்தின் மூலம் அழைத்துவரப்படுவதையும் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

எம் மண்ணில்
12 – 10 – 1920



தச்சையம்பதியாளின் திருப்பாதத்தில்
21 – 07 – 2004

### அமரர் ஆறுமுகம் விசுவலிங்கம்

(சமூகத்தொண்டர்)

(தானீசர், கரவை சிந்தாமணி விநாயகர் ஆலய 7ஆம் திருவிழா உபயகாரர், கரவை நவசக்தி சனசமூக நிலையம், கலாமன்றம், விளையாட்டுக்கழகம், சிந்தாமணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றின் வாழ்நாள் நிர்வாகசபை உறுப்பினர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
அறநெறி நின்று நற்பணியாற்றி
பண்பின் சிகரமாய் அவனியில் அனைவரும் போற்ற
வாழ்ந்த எம் தெய்வமே!
நீங்கள் மறைந்து நாற்பத்தைந்து நாளும் வந்ததுவே
மறக்க முடியவில்லையே ஐயா!
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து
வேண்டுவோர் வேண்டியதைத் தரும் அந்தச் சிவனிடம்
வேண்டிடுவோம் ஆத்மசாந்தி கொடு - என்று
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இன்று (28.08.2004) சனிக்கிழமை முற்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தகவல்:
ரமேஸ்வரன் - அகிலா (ஜேர்மனி),
அ.அருள்ராஜ் (லண்டன் - சதீஸ்),
கு.குருபரன் [மாணவன் - B.Com. HNDM, AAT, -Information Technology (Computer)].

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(35716)(42-12-15)


PRINCE
பிரின்ஸ்

துருப்பிடிக்காத உலோக கிச்சன் சிங்க்

நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.



Access Graphics

ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 524, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.





Dialog GSM
kit
எந்நேரமும் உன்னுடன்..

டயலொக்
கையடக்கத் தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

WESTERN UNION | MONEY TRANSFER
வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட எம்மை நாடுங்கள்



பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற சகல விதமான
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

ஸ்ரீ முருகன் SRI MURUGAN 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5392
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office. E.mail del-smskr@eureka.lk Fax : 222 3435



# M.M.I.C

## இப்பொழுது யாழ்நகரில்

அறிவிப்பாளர், ஊடகவியலாளர் நேரடிப் பயிற்சிநெறி

M.M.I.C நிறுவனத்தின் 3ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்புக் கழிவு 20% வழங்கப்படுகிறது

சிறப்புக் கழிவு 20%

இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் M.M.I.C நடத்தும் ஊடகவியலாளர் பயிற்சிநெறிக்கான அனுமதிகள் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒலிபரப்பு அறிவிப்பு, வியாபார மேம்படுத்தல், சந்தைப்படுத்துதல் போன்ற தொழில்நுட்ப பயிற்சிகள்

**பயிற்சிபெறும் மாணவர்களுக்கான நன்மைகள்**

காலம் 3 மாதம்

~~6000/=~~ 4800/=

- ஒலிபரப்பு ஊடகவியல் தகவல்களைப் பெறல்
- 3 மாதத்தில் நீங்கள் செலுத்தும் பயிற்சிக்கட்டணத்தை மீளப்பெற அறிவுரைகள் வழங்கல்.
- M.M.I.C மாணவர்களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகள் செய்தல்.
- கலை ஆர்வம் மிக்க M.M.I.C மாணவர்களின் கலைத்திறனை வெளிக்கொணரச் செய்யும் வகையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல். எழுத்தாற்றல் மிக்க மாணவர்களின் ஆக்கங்களைப்பத்திரிகையில் பிரசுரிப்பதோடு வானொலி, தொலைக்காட்சிகளில் இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் பங்குபற்ற ஏற்பாடுகளைச் செய்தல்.
- ஒவ்வொரு மாணவர்களிலும் தனித்தனிக் கவனம் எடுத்துத் தாழ்வுச்சிக்கல் கூச்சசுபாவத்தை அகற்றுதல்.
- கொழும்பில் இருந்தும் பிரபல ஊடகவியலாளர்கள் வருகை தந்து விரிவுரைகளும், பயிற்சியும் வழங்குவர்.

**தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி நெறி**

***Diploma in Mass media***

- வானொலி
- தொலைக்காட்சி
- பத்திரிகை போன்ற

காலம் 6 மாதம்

~~6500/=~~ 5200/=

வெகுஜன ஊடகக் கற்கை நெறி

★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ ஒலிபரப்புக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இலவசப் பயிற்சியும் பகுதி நேர வேலைவாய்ப்பும்.
★ இன்னும் பல நன்மைகள்

ஒகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற் கொள்ளவும்

மேலதிக விவரமறிய
**Call :- 0777-316258**

முக்கிய அறிவித்தல்

இம்மாதம் 27,28,29ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் M.M.I.Cயின் அரங்கம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இங்கு ஒலிபரப்புப் பயிற்சி பற்றிய தகவல்கள் வழங்கப்படுவதுடன் அறிவிப்பாளர் பயிற்சி பற்றிய நேரடிச் செயல்முறை விளக்கங்களும் இடம்பெறவுள்ளன. விரிவுரையாளர்கள் M.M.I.Cயின் நுண்கலைப் பணிப்பாளர், பொப்பிசைச் சக்கரவர்த்தி திரு. A.E.மனோகரன் அவர்கள் இலங்கை மற்றும் அகில இந்திய வானொலியின் மூத்த ஒலிபரப்பாளர் திரு.V.சுந்தரலிங்கம் அவர்கள் M.M.I.Cயின் நிர்வாகப் பணிப்பாளர் திரு.S.K.ரமேஷ் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இக்கலையைக் கற்க விரும்பும் மாணவர்கள் நிகழ்வு நடைபெறும் இடத்தில் குறைந்த கட்டணத்தில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இல. 15, சிறாம்பியடி ஒழுங்கை. (ஸ்ரான்லி வீதி) மணியம் பில்டிங் யாழ்ப்பாணம்.

# றிச்சாட்
## அப்பியாசப்புத்தகம்


# 1200இற்கு மேற்பட்ட வகைகள்

இப்பொழுது யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியில் சர்வதேச தரம் வாய்ந்ததும் இதுவரை நீங்கள் காணாததுமான அப்பியாசப் புத்தகங்களை அறிமுகம் செய்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

2002 ஆம் ஆண்டு கண்காட்சியில் எம்மால் அறிமுகம் செய்யப்பட்ட அப்பியாசப் புத்தகங்களை நீங்கள் யாழ்ப்பாணத்தில் சகல இடங்களிலும் பெற்றுக்கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

Richard
Quality Stationery

வாருங்கள்! வந்து பாருங்கள்!!




விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ளுங்கள்.

இலவசமான அழகான நேரசூசிகள் விநியோகிக்கப்படும்.

**ரூபா 4 இல் இருந்து பல விலைகளில் அப்பியாசப்புத்தகங்கள்**

எம்மிடம் ஐந்து தரத்தினாலான அப்பியாசப் புத்தகங்கள் உண்டு.

1. அதிதரம் வாய்ந்தது (டிஸ்னி)
2. மத்திய தரமானது (MD)
3. லமினேற்றட் அழகான மட்டைகளுடன் கூடியது.
4. R.T.C நம் 1(S) தர்மானது.
5. 'B' என்னும் குறியீடு கொண்டதும் (மாணவர்களின் பொருளாதார பிரச்சினைகளுக்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டது).

# ஒரு முறை வந்து பாருங்கள்

## அறியாத பல புதுமைகள் காண்பீர்கள்

**நடராஜ் உற்பத்திகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

பென்சில், கட்டர், அழிரப்பர், அடிமட்டம்
(நடராஜ் ஏகவிநியோகஸ்தர்கள், இலங்கை)

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக இலவசமாகப் புத்தகங்களை வழங்கும் நாம் வெகுவிரைவில யாழ். மாணவர்களையும் சந்திக்கவுள்ளோம்.



**கையிருப்பு முடியுமுன் முந்திக் கொள்ளுங்கள்.**

யாழ்ப்பாண விநியோகஸ்தர்:-

எஸ்.ஜே.அன்ட் பீ.றேட் ஏஜென்ஸி
இல. 39, மூன்றாம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

# றிச்சாட் றேடிங் கம்பனி

64, பெரக்கும்பா வீதி, குருநாகல்.

T.P.:- 037 222 2547

(35742)

## பொருண்மிய மதியுரையகத்தின் வேலைவாய்ப்பு வங்கி

**பின்வரும் பயிற்சிநெறிகளை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருப்போருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

- Masonary: மேசன் பயிற்சி
- Carpentry: தச்சுவேலைப் பயிற்சி
- Electrical House Wiring: வீட்டு மின்னிணைப்பு
- National Certificat in English: ஆங்கிலத்திற்கான தேசிய சான்றிதழ்

ஆகிய துறைகளில் பயிற்சிபெற்ற உங்களுக்கான வேலைகளை வழங்க நாம் தயாராக உள்ளோம். உங்களுக்கான சம்பளம் திறமைக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும். விரும்பியவர்கள் கீழ்வரும் முகவரியில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்
பொருண்மிய மதியுரையகம்
A-9 வீதி,
இரணைமடுச் சந்தி,
கிளிநொச்சி.

(சி-36901) (21-12-15)



## பதவி வெற்றிடம்

**கணனி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. விரிவுரையாளர் (பகுதி நேரம்)
   Corel Draw, Photoshop, Pagemaker
2. விரிவுரையாளர் (பகுதி நேரம்)
   Word, Excel, Access
3. எழுது வினைஞர்

**விளம்பர இலக்கம் 2359**
**உதயன் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

(35-21-12) (C/37286)



## 20% விசேட கழிவு

**யாழ். வர்த்தகக் கண்காட்சி**
**27-08-2004 - 29-08-2004**
**விரையுங்கள்**
**எமது காட்சியறைக்கு**

**யசோ ஆட்கிரபிக்ஸ்**

(21-12-15) (சி37271)



**வர்த்தகக் கண்காட்சியில் வனப்புறு அம்சங்களை கண்டு களித்திட இன்றே விரையுங்கள் யாழ். மத்திய கல்லூரியில் எமது காட்சி அறை இல.16 இற்கு விரைந்து வாருங்கள்**
**ஆகஸ்ட் 27,28,29.**




LG Digitally yours
**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**
141, Power House Road Jaffna T.P- 021-222-5766


## ஓராண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 - 03 - 1970 |  | 09 - 09 - 2003 |

அமரர் **பொன்னம்பலம் பகீரதன் (பகு)**

**திதி: ஆவணி- பூர்வபக்க சதுர்த்தி 28.08.2004**

ஓராண்டும் ஆயிற்றோ உத்தமரே உமைப்பிரிந்து
தீராத வேதனையால் தினம்தினம் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (28.08.2004) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்துமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அந்தணத்திடல்,
கரவெட்டி.
(35714)(39-21-15-12)

பிரிவால்வருந்தும்:
**பெற்றோர்.**


## இன்று முதல்

**வடமராட்சி கணனிப் பாவனையாளர்களே உங்கள் அருகில்**

MICRO Pc MPAQ Your Reliable Partner

**MICRO PC SYSTEMS**

## நெல்லியடியில்

**எமது சேவையை விரிவுபடுத்தியுள்ளோம்**




**எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

பிரதான வீதி (பொலீஸ் நிலையத்திற்கு அருகில்) நெல்லியடி தொலைபேசி: 077 303 9536

**Computer Sales, service, repairs, networking maintenance and mobile technical support.**

கிளைகள்:
வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி
Web: www.mipaq.com E-mail: micropc@dialogsl.net


## பணிநிலை வேண்டுகை

**ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

**1. பணிநிலை: கணக்கு எழுதுநர்**
- தக்கமை: க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல்.
- சம்பள அளவுத் திட்டம்:- $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

**2. பணிநிலை: விலை மதிப்பீட்டாளர் - (புடைவை, இலத்திரனியல், (ஒப்பந்த அடிப்படையில்) ஊர்தி உதிரிகள்)**
- தகைமை: 01. ஆண்டு - 08
  02. குறிப்பிட்ட துறையில் 05 ஆண்டுகள் பட்டறிவு
- சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**3. பணிநிலை: ஆய அலுவலர் (ஆண்கள்)**
- தகைமை: க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
- சம்பள அளவுத் திட்டம்:- $\frac{3630 - 4730}{10 \times 110} + 2000$

**4. பணிநிலை: ஆய உதவியாளர் (ஆண்கள்)**
- தகைமை: க.பொ.த.சாதாரணதரத்தில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- சம்பள அளவுத் திட்டம்:- $\frac{3080 - 4180}{10 \times 110} + 2000$

**5. பணிநிலை: அலுவலக உதவியாளர்**
- தகைமை: ஆண்டு - 08
- சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**6. பணிநிலை: சமையலாளர்**
- தகைமை: குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்
- சம்பள அளவுத் திட்டம்:- $\frac{4210 - 5410}{10 \times 120} + 2000$

**7. பணிநிலை: சமையல் உதவியாளர்**
- தகைமை: குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்
- சம்பள அளவுத் திட்டம்:- $\frac{2830 - 3930}{10 \times 110} + 2000$

தகுதியுடையவர்கள் 2004-09-07ஆம் நாள் காலை 10.00 மணிக்குத் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக

2004.08.26


**மனிதவள மேலாளர், ஆயப்பகுதி, நிதித்துறை.**

(C-37275)(21-12-15)

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

(8ஆம் திருவிழா)



## அடைக்கலம் தாரும் ஐயா!

உள்ளுறை வேலும் உந்தன்
உடனிரு மாதர் சீரும்
தெள்ளுறு முகங்கள் ஆறும்
திருவிழிக் கருணை நோக்கும்
வெள்ளமாய் உள்ளத் துள்ளே
வேகமாய்(ப்) பாய்ந்து வந்து
அள்ளுது நல்லூர்க் கந்தா!
அடைக்கலம்,தாரும் ஐயா!

- முருகனடியான்.

## அருள் தரவேண்டும் ஐயா!

இராகம்: பிலஹரி தாளம்: ஆதி

அருள்தர வேண்டும் ஐயா - நல்லூர் நாதா
அருள் தர வேண்டும் ஐயா

மருள் நிறை வாழ்வினில் மூழ்கித் தத்தளிக்காது
இருள் நிறை ஆணவம் நீங்கவே என்றென்றும்
(அருள் தர)

பேராசைப் பிணியது பீடித் தலைத்திடாது
தீராத தீவினை என்னை அலைத்திடாது
நேரான நல்வழி தன்னையே பெற்றிட
கூரான ஞானத்தை அளித்து உயதி பெற
(அருள்தர)

- கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## மெல்ல முடிப்பான் மிடி

*நல்ல தமிழ் காப்போன்*
*நல்லை நகர்வாழும்*
*தில்லைச் சிவனின்*
*திருமகனார் - சூல்கொள்ளும்*
*வல்ல பகைதனை*
*வெல்லும் வலுத்தந்து*
*மெல்ல முடிப்பான் மிடி.*

- அங்குசன்.

## சண்முகப் பிரியனே சரணம்!

பல்லவி

அருளாய் வருவாய் ஆறுமுகனே - தன்னில்
இருள் மயம் போக்கும் தினந் துதி மனனே!
(அருள்வாய் வருவாய்)

அனுபல்லவி

குருவடிவான ஈசன் திருமைந்தா - என்றும்
கருவாய் தருவாய் உன் திருவருளே!
(அருள்வாய் வருவாய்)

சரணம்

சிந்தையில் இருப்பவனே உனைச்
சிரந்தனிலேற்றித் தொழுகின்றோம்
எந்தையில் இரங்கிடுவாய் ஐயா;
எம் துயர் போக்கிடுவாய்!
கந்தா கடம்பா என்றழைப் போர்க்கு
கனிந்தருள் செய்யும் கதிர்வேலா;
விந்தைகள் பல புரிவாய் எம்
வினைகளை விரட்டியே வைத்திடுவாய்!
(அருள்வாய் வருவாய்)

- என்.பிரதித்தன்

## கந்தன் தினமும் பவனியாம்

வேலேந்திக் கந்தன் பவனியாம்
நல்லை வீதியிலே தினமும் பவனியாம்
அடியவர்கள் பண்பாடிடப் பவனியாம்
அழகு அரிவையர் புடைசூழப் பவனியாம்
சிறார்கள் குதூகலித்திடவே பவனியாம்
வண்ண மயிலேறி முருகன் பவனியாம்
வள்ளி தெய்வயானை மருங்கிருத்தியே பவனியாம்
தெள்ளுதமிழ்க் காவலன் நற்பவனியாம்
தமிழன் தலைநிமிர்ந்து வளம் பெற்றிடவே பவனியாம்.

- இ.விஜயரத்தினம்.

## அஞ்சேலலன் அபயமளிக்கும் அழகன்

கஞ்சமலர் வாவி சூழ் நல்லையில்
விஞ்சு புகழ் வேலவன் வீற்றிருக்கின்றான்
தஞ்சமென அவனைச் சரணடைந்தால்
அஞ்சேலென அபயமளித்திடுவான்

- திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்.

# நூல் வரிசை



நூல்: சமூக அறிவு
(அரையாண்டு ஆய்வு இதழ்)
ஆசிரியர்: பேராசிரியர் வி.நித்தியானந்தம்
வெளியீடு: குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியற்றுறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தத்தை ஆசிரியராகக் கொண்டு "சமூக அறிவு - தொகுதி 1, இதழ் 1&2 ஜுலை 2004 என்னும் அரையாண்டு ஆய்விதழ் வெளிவந்துள்ளது. குமரன் புத்தக இல்லத்தினால் வருடம் இருமுறை (தை, ஆடி) வெளியிடப்படும் இந்நூல் சமூகம் அதன் அசைவியக்கம் பற்றிய புலமைப் பேறுகளை ஒருங்கிணைக்கும் ஓர் ஆய்விதழாக அமைந்துள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சமூக விஞ்ஞான பாடங்களை மாணவர்கள் தமிழில் பயிலத் தொடங்கி ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழில் சமூக விஞ்ஞானிகள் பெருமளவில் தோன்றவில்லை. ஆங்கிலத்தினை வேண்டப்படும் அளவுக்கு ஓர் இரண்டாம் மட்டத்தில்வைத்துத் தாய்மொழி மூலம் அறிவூட்டுவதே நீண்டகால வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் சிறப்புடையதாக அமையும் என ஆசிரியர் தனது கருத்தினைக் கூறுகின்றார். தமிழில் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதன் மூலம் தமிழை நாடி ஏனையோர் வருவர் என்ற உயர்ந்த நோக்கத்தினையும் இவ்வாய்விதழ் கொண்டுள்ளது.

முதலாவது இதழில் ஐந்து ஆய்வுக் கட்டுரைகளும், இரண்டு நூலாய்வுக் கட்டுரைகளும், இரண்டு நூல்கள் பற்றிய விமர்சனங்களும் உலகப் புகழ்பெற்ற இரு அமெரிக்கப் பேராசிரியர்கள் பற்றிய அஞ்சலிகளும் இடம்பெற்றுள்ளன.

பேராசிரியர் கா.சிவத்தம்பியால் எழுதப்பட்ட "யாழ்ப்பாணச் சமூகப் பாரம்பரியத்தில் கட்டடம் பற்றிய எண்ணக்கரு" என்ற கட்டுரை ஈழத தமிழ்ச் சமூகத்தின் கட்டட நிர்மாணத்தின் சில தனித்துவ இயல்புகளை விளக்கும் ஒரு முன்னோடி முயற்சியாக அமைகின்றது. பேராசிரியர் வி.நித்தியானந்தத்தால் எழுதப்பட்ட "ஈழத் தமிழரும் மருத்துவக் கல்வியும் அதன் சமூக பொருளாதாரப் பரிமாணம்" என்ற கட்டுரையில் மருத்துவக்கல்வியின் மாறுபடும் பொருளாதார முக்கியத்துவம் எடுத்துக் கூறப்பட்டு அதன்மூலம் ஈழத்தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட திரிபுநிலைகள் விளக்கப்படுகின்றன. ஈழத் தமிழச் சமூகத்தில் மருத்துவர்களின் பங்களிப்பு, தமிழ் மருத்துவர்களுக்கும் சமூக முன்னேற்றத்திற்கும இடையேயுள்ள இடைவெளி, அவற்றின் நீண்டகால, குறுங்காலப் பாதிப்பு அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான உரிய வழிவகைகள் என்பன ஆராயப்படுகின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் முதுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி க.ரகுராகவன், ஜனனி ரகுராகவன் ஆகிய இருவராலும் எழுதப்பட்ட "நிறுவனக் கோட்பாடுகளும் சந்தைப்படுத்தல் ஆய்வுகளும் - அவை மத்தியிலான கருதுகோள் ரீதியான தொடர்பு" என்ற கட்டுரையும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

மேலே கூறியவற்றைவிட ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட இருகட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. அமெரிக்காவில் MITஇல் மொழியியல் பேராசிரியராகக் கடமையாற்றும் நோம் சொம்ஸ்கி என்பவரால் எழுதப்பட்ட "மேலாதிக்கமும் அதன் தடுமாற்றமும் என்ற கட்டுரை அமெரிக்கா உலகத் தலைவனாக வர மேற்கொண்ட முயற்சிகளை விவரிப்பதுடன், அதுதொடர்பாக அமெரிக்கா எதிர்நோக்கும் பிரச்சினை பற்றியும் அதன் சுயநலமான போலியான வெளிவிவகார கொள்கைகளைப் பற்றியும் அதன் உலக மேலாதிக்க முயற்சிகளின் தடுமாற்றங்கள் பற்றியும் விமர்சிக்கின்றது. அடுத்தகட்டுரை பேராசிரியர் ஜயதேவ உயங்கொட அவர்களால் எழுதப்பட்ட "மோதலும் மோதல்தீர்வும்" என்பதாகும். மோதல் பற்றியும் அதன் தீர்வு பற்றியும் கோட்பாட்டு ரீதியான ஒரு கண்ணோட்டத்தை இக்கட்டுரை மேற்கொள்ள முனைகின்றது.

இதுவரையும் இலங்கையில் வெளிவந்த சமூக விஞ்ஞான சஞ்சிகைகள் உள்ளடக்கியிராத விடயங்களான நூலாய்வு, நூல்விமர்சனம், அஞ்சலிக் கட்டுரை போன்ற விடயங்களை இவ்வாய்விதழ் கொண்டுள்ளமை இதன் தனித்தன்மையைக் காட்டும் அம்சமாக அமைகின்றது.

"இலங்கையை மீட்டெடுத்தல் - துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான தொலைநோக்கும் தந்திரமும்" என்ற 2003அம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை அரசு வெளியிட்ட 222 பக்கங்களைக் கொண்ட அறிக்கை பற்றிய ஆய்வும் ஐராவதம் மகாதேவனால் எழுதப்பட்ட "Early Tamil Epigraphy From The Earliest Times To The Sixth Century" என்ற நூல்பற்றிய ஆய்வும் வெளிவந்துள்ளன. இவையும் தனிப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்று கூறத்தக்கவகையில் அமைந்துள்ளன.

அடுத்து பேராசிரியர் வி.நித்தியானந்தத்தால் எழுதப்பட்ட "இலங்கையின் பொருளாதார வரலாறு: வடக்கு - கிழக்குப் பரிமாணம்" என்ற நூல்களுக்கான விமர்சனமும் உலக அபிவிருத்தி அறிக்கை 2004 இற்கான விமர்சனமும் இவ்வாய்வு இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் உலகப்புகழ்பெற்ற திறனாய்வாளர் எட்வர்ட் சயித் மற்றும் பொருளாதாரப் பேராசிரியர் போல் மார்லர் சுவிசி ஆகியோரின் மறைவையொட்டிய அஞ்சலிக்கட்டுரைகள் கே.எஸ்.சிவகுமாரனால் எழுதப்பட்டுள்ளன.

'சமூக அறிவு' என்னும் இவ்வாய்விதழ் பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சமூக இயக்கம் பற்றிய அறிவை வேண்டி நிற்போர் குறித்த அறிவுத் தேடலை நிவர்த்திசெய்யும் நோக்குடன் வெளிவருகிறது.

**ந.பேரின்பநாதன்**
முதுநிலை விரிவுரையாளர்.

## நல்லூர்க் கந்தன் ஆலயச்சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு தாரணி ரஞ்சனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் - பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் - எம். லோகேந்திரன் ஆகியோர் பங்கேற்பர். (10)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் இரவு 7 மணிக்கு நடத்திவரும் உற்சவகால நிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை சாந்தினி பற்பநாதனின் இசைக்கச்சேரி இடம் பெறும். (10)

## மாயனைத் துதித்திடுவோம்



கோபா லாஅரி கோவிந்தா எனக்
குழந்தைக் கண்ணனைப் பாடிடுவோம்
பூபா லாவென நாராயணனின்
பொன்னடி சென்னி சூடிடுவோம் கோ)

ஆவின மெல்லாம் அம்மா எனவே
ஆனந் தமாகித் துள்ளிவர
பூமாலைபல புதுவிதம் சூட்டிப்
புண்ணிய குரவை ஆடிடுவோம் கோ)

வெண்ணெய் தயிர்பால் சர்க்கரை கனிகள்
விரும்பிய அவல்பல பட்சணங்கள்
கண்ணனின் தாமரைக் கையில் கொடுத்து
களிப்பொடு குரவை ஆடிடுவோம் (கோ)

காளிங்கன்மேலே கூத்துகளாடிக்
காளையை வென்ற மாயவனை
தாளங்களோடே மேளங்கள் கொட்டிச்
சங்கீதக் குரவை, ஆடிடுவோம் (கோ)

எங்கணும் நிறைந்த கோவிந்தன் பாதம்
எங்களின் மனத்தில் வைத்திடுவோம்
மங்களம் பொங்கும் சங்கு சக்கர
மாயனைப் போற்றித் துதித்திடுவோம் (கோ)

- அருட்கவி சீ.விநாசித்தம்பி.

✦ அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அதனை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரமாகின்றது.


இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தில் எட்டாம் திருவிழா



பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவுத் திருவிழா மாலை 5.30 மணிக்கு
வேல் – வள்ளி தெய்வானை வீதி வலம்.

தொல்லை வினைபோக்கும் நல்லைக் கந்தனே

இனிமையான புதிய, பழைய பாடல்களை
நவீன முறையில் ஒலிப்பதிவு செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த இடம் :
ஸ்கைறோஸ்
- ஒலிப்பதிவுக் கூடம் -
இல. 01, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
CD TO CASSETTE CD TO CD VHS TO CD RECORDING
(C/37202) [அதி உன்னத பாடல்பதிவுகளுக்கு நம்பிக்கையான இடம்]


## வருக முருக!

இராகம்: கீர்வாணி தாளம்: திஸ்ரம்

பல்லவி

வருக முருக பரம குருவே
வரதா குகனே

அனுபல்லவி

அரி மருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம் (வருக)

சரணங்கள்



பரவுவார்க் கருளுவாய் நீ
பரமசுகந் தரு பானு
சகியோகவதி தரு புதல்விதனை
மணந்த குமாரசுவாமி
மன்முவந்து மயிலேறிவா
சிவயோகசுவாமி நீடு வாழ்க வாழ்க
வையகம் வாழ்க. (வருக)


- யோகர்சுவாமிகள்.

# கண்காட்சிச் சாலைகளின் வண்ணக்கோலங்கள்










# உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவோம்

## வணிகர் கழகப் பிரமுகர் சொல்கிறார்



உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை உயர்த்தவும் அவற்றை வெளி உலகுக்குத் தெரியப்படுத்தவும் இந்த வர்த்தகக் கண்காட்சி உதவும் என்று யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் மு.சுந்தரலிங்கம் (சதாபொன்ஸ்) தெரிவித்துள்ளார்.

யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ள வர்த்தகக் கண்காட்சி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வணிகர் கழகம் ஏற்பாடுசெய்துள்ள வர்த்தகக் கண்காட்சி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவா இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வணிகர் கழகம் ஏற்பாடுசெய்துள்ள வர்த்தகக் கண்காட்சி வணிகர்களுக்கு மட்டுமல்லாது, பொதுமக்களுக்கும் பயன்தரக் கூடியவகையில் அமைந்துள்ளது. வெளியுலக வர்த்தகத்தின் நுட்பங்களையும் அங்கு அறிமுகமாகும் புதிய தொழில் நுட்பங்களையும் எமது வணிகர்கள் அறியவும் அவற்றைப் பயன்படுத்திப் புதிய தொழில்துறைகளை ஆரம்பிக்கவும் சந்தர்ப்பங் கிட்டியுள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் உயர்நத சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சி வணிகர்களுக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்குப் பயன் அளிக்கக் கூடியதாக அமையவேண்டும் - என்றார். (ஐ-3)

# இலங்கை வர்த்தக சம்மேளனமும் வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்பு



யாழ். வணிகர் கழகம் நடத்தும் வர்த்தகக் கண்காட்சியில் இலங்கை வர்த்தக சம்மேளனமும் பங்குபற்றுகின்றது.

சம்மேளனத்தின் சிரேஷ்ட செயலாளர் திருமதி புவி டொமினிங்கோபிள்ளை தலைமையில் சம்மேளனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளார்.

வர்த்தகக் கண்காட்சி தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:

யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ள கண்காட்சிக்கு எமது ஆதரவை வழங்கியுள்ளோம். எமது சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் 9 நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன. அந்த நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தியுள்ளன.

அத்துடன், எமது சம்மேளனத்தை சேர்ந்த உறுப்பினர்கள் தொழில் துறை சார்ந்த தகவல்களை வழங்க விசேட பிரிவு ஒன்றைத் திறந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், பொருள்களை இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் தொடர்பான தகவல்களை இந்தப் பிரிவில் பெறலாம். கணனிமயப்படுத்தப்பட்ட இத்தகவல்களை வழங்க இங்கு வசதி செய்துள்ளோம் - என்றார் அவர்.

வர்த்தகக் கண்காட்சி

அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திப் பொருள்களை வாங்கி இனாம் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அண்ணா

அண்ணா தொழிலகம்

நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-37293)(29-15-12-24) இணுவில்.

# வர்த்தகத்தில் உலகத்தோடு ஒத்து ஓடுவோம்!

## வர்த்தகப் பிரமுகர் கருத்து



யாழ். வர்த்தகர்கள் உலகின் போக்கோடு ஒத்து ஓடவும் உலக மயமாக்கலில் இணைந்துகொள்ளவும் இந்த வர்த்தகக் கண்காட்சி உதவும்.

யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின சம்மேளனப் பொதுச் செயலாளர் கா.நித்தியானந்தன் இப்படிக் கூறுகிறார்.

வர்த்தகக் கண்காட்சி தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

வணிகர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் வர்த்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக மயமாக்கலில் நாமும் இணைந்து அந்தச் சவாலுக்கு முகங்கொடுக்கும் வகையில் பொருளாதாரத்துறையில் புதுயுகம் படைக்க இந்த வர்த்தகக் கண்காட்சி உதவும் என நம்புகின்றோம்.

கொழும்பு வர்த்தகமும் எமது வர்த்தகமும் வளர்ச்சிகாண உதவும் இக்கண்காட்சி உள்ளூர் பொருள்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைக்கப் பங்களிக்க வேண்டும் என்பது சகலரதும் விருப்பமாகும் - என்றார். (ஐ-3)

## வடக்கு - தெற்கு...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றோம். அந்த நிறுவனங்களின் காட்சியகங்கள் இங்கு திறக்கப்படும்போது மக்கள் அவற்றின் தரங்களை அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தெற்குச் சந்தையில் அறிமுகமாகும் புதிய புதிய பொருள்களை இக்கண்காட்சியில் மக்கள் பார்க்கச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. கொழும்பு சென்று அவற்றைப் பார்க்க முடியாதவர்கள் இக்கண்காட்சி மூலம் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ★

யாழ். வர்த்தகக் கண்காட்சி 2004

SINGER

HITACHI TCL SISIL Whirlpool

Welling TEFAL Prestige

எமது காட்சியறைக்கு வரும் அனைத்துப் பார்வையாளர்களுக்கும் அதிர்ஷ்டம் காத்திருக்கின்றது. தினமும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு KODAK CAMERA பரிசாக வழங்கப்படவுள்ளது.

(சி-37603) (24-12-15)

யாழ். மாவட்ட மாபெரும் வர்த்தகக் கண்காட்சி - 2004

27.08.2004 - 29.08.2004

✦ உணவு மற்றும் குடிவகை
✦ மென் பானங்கள்
✦ வாசனைத் திரவியங்கள்
✦ மருந்து மற்றும் விவசாய இரசாயனங்கள்

போன்றவற்றிற்குரிய கண்ணாடியிலான கொள்கலன்களின் (போத்தல்கள்) இலங்கையின் ஏக தயாரிப்பாளர்களான நாம் உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். யாழ். விற்பனைக் கண்காட்சியில் எமது காட்சி அறைக்கு இன்றே வருகை தாருங்கள்.

✦ மொத்த விற்பனையில் ஆர்வமுடையோர்
✦ சிறிய தொழில் முனைவோர்

ஆகியோரை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

Ceylon Glass Company Limited,
148, Maligaw Road,
Ratmalana
0112635481, 0777 6890513

பழைய கண்ணாடிப் போத்தல் ஓடுகளை எமக்குச் சேரிகத்து வழங்கக்கூடியோரும் உடனடியாகத் தொடர்புகொள்க.

(சி-37602) (24-12-15)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ELF இசுசு 250 இற்கு உரிய அலுமினியத்திலான முழு பொடி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 0777 917794, 021 - 222 3049, 021 - 222 3050. (சி-37280)

## கார் விற்பனைக்கு

11 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய வெள்ளை நிற லான்சர் கார் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. (Ac உண்டு) தொடர்பு: ச.சிவரூபன், இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம். (பிற்பகல் 4.00 மணிக்குப் பின்பு). (35770)

## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு V.C ஒழுங்கையில் 08 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0112 593966 (35583)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் முழுநிறை 1kg 160/- தேறிய நிறை 250/-, கல்பேட் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தாசன், 158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம். எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். (35765)

## திருமண சேவை

பட்டதாரிகள், ஆசிரியர்கள், டாக்டர்கள், வர்த்தகர்கள், தனியார் ஸ்தாபனங்களில் பணியாற்றும் மணமக்களை நாடுவோர் தொடர்பு கொள்ளவும்: த.சிவானந்தன் பிரபல சோதிடர் 264, பலாலி வீதி, கந்தர்மடம் (பேபி போட்டோ முன்பாக). (35703)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலை ரூபா 35, பேட்டுக்குஞ்சுகள் விலை ரூபா 50. 30.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும் எமது பருத்தித்துறைக் கிளையிலும், முருகன் சாவகச்சேரி, சூட்டிபாம் வட்டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (35466)

Prima புறொயிலர் குஞ்சுகளும் சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகளும் 30.08.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 3529, 2867, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. (35534)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றமற்ற பாவம் குறைந்த அழகிய பட்டதாரி ஆசிரியை மணமகளுக்கு நற்பண்புள்ள 30 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரி மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2360 மே/பா உதயன், யாழ்ப்பாணம். T.P 222 6992.(35780)

## மணமகள் தேவை

1969 விசாக நட்சத்திரம், 4ஆம் பாதம், 36 கிரகபாவமுள்ள, பயிற்றப்பட்ட ஆசிரிய மணமகனுக்குப் படித்த, பொருத்தமான, அழகான மணமகள் தேவை.
தொடர்பு: T.P.: 077 6569743. (35625)

கனடா பிரஜாவுரிமையுடைய 1971ஆம் ஆண்டு கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த M.Sc. (Electrical Engineer) கனடா அரச உத்தியோகத்தருக்கும் 1975ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமுள்ள சுவிஸ் பிரஜாவுரிமையுடையவருக்கும் மணமகள்கள தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 361, கோயில் வீதி, நல்லூர்.(35776)

## ஆங்கில வாய்மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.28

பலாலி ஆசிரிய கலாசாலையின் இறுதி வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அதிபர் கு.சதாசிவமூர்த்தி அறிவித்துள்ளார். (10)

## பதவிகள் வெற்றிடம்

கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்குப் பொருத்தமான அதிபர், ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடற் பிரிவிற் பெற்றுப் பூரணப்படுத்தி 2004.09.05 ஆம் திகதிக்கு முன் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குக.

(1) யா/புற்றளை ம.வி. - அதிபர் பதவி
(2) யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் - அதிபர் பதவி
(3) யா/வதிரி வடக்கு மெ.மி.த.க. - அதிபர் பதவி
(4) யா/கரணவாய் தாமோதரா வித்தியாலயம் - அதிபர் பதவி
(5) ஆசிரிய ஆலோசகர் - விஞ்ஞானம்
(6) உதவிக்கல்விப் பணிப்பாளர் - கணிதம்
(7) உதவிக்கல்விப் பணிப்பாளர் - அழகியற்கல்வி

வே.தி.செல்வரத்தினம்
வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.
(C/37292)(35-21-15-12)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.10.1955

மறைவு 28.08.2002

அமரர்
**பொன்னையா மிருகண்டர்**
(வருமான மேற்பார்வையாளர். நகரசபை சாவகச்சேரி)

திதி: 03-09-2004

மிருகண்டப் பெருமகனே மீசாலைத் தவமகனே
திருமேனி கண்டிங்கு ஆண்டிரண்டு ஆயிற்றையா
கருமேகம் ஆயிற்று எம்களையான பெருவாழ்வு
ஒரு போதும் மறவோம் ஐயா;
ஈரவிழியுடன் இறைஞ்சுகின்றோம் இறைவனையே!

பெரியபனை, பளை. (35744)(21-12-30-15) - குடும்பத்தினர்.

## இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

அரியாலை,ஓக.28

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த இறுதிப் போட்டியில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அதினபன், இலங்கை வங்கியின் முகாமையாளர் சி.விக்கினராஜா, யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர், எஸ்இரவீந்திரா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (10-17)

## அரச அதிபருக்கு மகஜர்

குருநகர்,ஓக.28

யாழ். கடலேரி வெளிச்சவீட்டைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது. (எ-51)

## நேரில் வரவும்
## Walk-in Interview



இன்று 28ஆம் திகதியும், நாளை 29ஆம் திகதியும் காலை 10மணி முதல் மாலை 5மணிவரை

கொழும்பில் உள்ள பிரபல பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Typesetters**
1-2 வருட அனுபவமுள்ள 20-25 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**Graphic Designers**
2-3 வருட அனுபவமுள்ள 20-27 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

**Trainee Typesetters**
20-22 வயதிற்கு இடைப்பட்டவராகவும். G.C.E (O/L) சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**Trainee Web Printing Machine Operators**
20-22 வயதிற்கு இடைப்பட்டவராகவும். G.C.E.(O/L) சித்தி அடைந்தவராகவும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட நேரத்தில் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களுடன் (மூலப் பிரதிகள்) நேரில் வரவும் (C/37291)

மனிதவள முகாமையாளர்
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டட்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
**26 உற்சவ நாள்களிலும்**
(ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்)

**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969

உலகத் தமிழர்களின் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி

ஊடக அனுசரணை:- 'உதயன்'

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகநாதன் சரஸ்வதி



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் சரஸ்வதி அவர்கள் 24.08.2004 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும காலஞ்சென்ற சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் தவமணியின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரன், இராஜேஸ்வரி, புஸ்பராணி, ஜெயராணி, இராஜேஸ்வரன், விக்கினேஸவரன், ஞானேஸ்வரன், சண்முகராணி, இரட்னேஸ்வரன், வதனராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி, இரட்ணம், பேரின்ப நாயகம், செல்வநாயகம், இராஜநாயகி, பானுமதி, தேவரஞ்சனா, சிவகுமார், கலைமதி இராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சத்தியமூர்த்தி, தனஞ்சயன், கணேசபாலன் ஆகியோரின் பெரியம்மாவும் தர்சினி, கஜீந்தன், மயூரன், கேந்திரன், லேனிகா, யசீகரன், சிவகௌரி, கோகுலன், மைதிலி, ரேகா, றோகித், லதீகா, தர்சிகா, திலக், அருண், ஆரபி, தீபக்,அபிஷேக், சகானா, சஜீத்தா, நிரோஷன், லக்சிகா, வக்சிகா, கீர்த்திகா, சஜித், சயனிக்கா, சனுஜா, பிரசாத், கார்த்திக், பிரகாஷ், அனுஷியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் எ்.டியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 2913

| | | |
|---|---|---|
| நாகேஸ்வரன் | 781 369 1691 | (USA) |
| ராதா | 508 879 0081 | (USA) |
| சிந்தன் | 059 494 776 | (UAE) |
| விக்கி | 416 438 0274 | (Canada) |
| ஞானி | (32)49-43 65982 | (Belgeam) |
| ராயு | 905 502 5168 | (Canada) |
| ரஜி | 905 303 8016 | (Canada) |

(35774)(34-21-12-15)

## கந்தர் அந்தோனிப்பிள்ளை
### (வெள்ளையப்பா)



மாதனை, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட கந்தர் அந்தோனிப்பிள்ளை அவர்கள் செவ்வாய்க்கிழமை 24.08.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரோணிக்காவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்ரன் பிலிப்பு, ஆனந்தராசா மற்றும் மரியப்பிள்ளை, ஜேசுதாசன் (கனடா), புஸ்பராணி (டென்மார்க்), புஸ்பராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற லூர்த்தம்மா, மரியதாஸ், ஜெஸ்மின் (கனடா), காலஞ்சென்ற செல்வராசா (டென்மார்க்), ஜொய்ஸ் (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் பத்மநாதன் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற பிரேம்குமார் மற்றும் ஞானராசா, மரியமலர் (லண்டன்), ஆனந்தராசா (லண்டன்), தேவராசா (சுவிஸ்), செல்வமலர் (சுவிஸ்), ஜெயராசா (லண்டன்), நேசமலர், றிச்சி (கனடா), லெமி (கனடா), கீதாஞ்சலி (டென்மார்க்), சுஜிதா (டென்மார்க்) ஜேம்குமார் (டென்மார்க்), றுபேஸ்குமார் (டென்மார்க்), நியோமா (கனடா), எப்சியா (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2004) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று, பூதவுடல் திருப்பலி பூசையுடன் கோரியடி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மரியதாஸ் - மரியப்பிள்ளை (மகள்)
புஸ்பராசா (சிறி- மகன் - கனடா)
மாதனை,
பருத்தித்துறை.
(39-21-12-15) (சி.35777)

# உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்







## ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம் முதல் மூன்று இடங்களும் அமெரிக்காவுக்கு

எதென்ஸ்,ஓக.28

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் நேற்று முன்தினம் இரவு ஆண்களுக்கான 200மீற்றர் ஓட்டம் நடந்தது. இதில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தியது. முதல் மூன்று இடங்களையும் அமெரிக்க வீரர்களே பிடித்தனர்.

ஷான் கிரவ்போர்ட் 19.79 வினாடியில் கடந்து தங்கப் பதக்கம் பெற்றார். பேர்னாட் வில்லியம்ஸ் 20.01 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். 100 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்த ஜஸ்டின் கேட்லின் 20.03 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றார். (8)



200 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீரர்களான ஷான் கிரவ்போட், பேனாட் வில்லியம்ஸ் முறையே தங்கம், வெள்ளி ஆகிய பதக்கங்களைப் பெற்றனர். மகிழ்ச்சி மிகுதியில் கிரவ்போட் வில்லியம்ஸின் தோளில் தாவுகிறார்.

## இஸ்ரேலுக்கு முதல் தங்கம்



நவீன பாய்மரப் பட்குப் போட்டியில் இஸ்ரேல் தனது முதலாவது தங்கத்தை சுவீகரித்துக்கொண்டது. இதன் மூலம் இவ்வருட ஒலிம்பிக்கின் தங்கப் பட்டியலில் அதுவும் இடம்பிடித்தது. அந்த நாட்டின வீரர் கேல் பிரீட்மேன் இப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

தான் பெற்றுக்கொண்ட தங்கப் பதக்கத்தைக் கடித்துத தனது வெற்றியின் மகிழ்ச்சியை ரசிகர்களுக்குத் தெரிவிப்பதைப படத்தில் காணலாம்.

## இந்தியாவுக்கு மற்றொரு தோல்வி

எதென்ஸ்,ஓக.28

எதென்ஸ் ஒலிம்பிக் ஆண்கள் ஹொக்கியில் புதன் கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் 3-0 என்ற கோல்கணக்கில் இந்தியாவை வென்றது.

இதன்மூலம் இந்தியா 7அல்லது 8ஆவது இடத்துக்காகப் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் 5அல்லது 6ஆவது இடத்துக்கான போட்டியில் விளையாட வேண்டியுள்ளது.

இப்போட்டியில் வென்று ஒட்டு மொத்தமாக 5ஆவது இடத்தைப் பிடித்திருந்தால் பாகிஸ்தானில் இந்த ஆண்டு டிசெம்பரில் நடைபெறும் சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டிக்கு இந்தியா நேரிடையாகத் தகுதிபெறும். 6 நாடுகள் பங்கேற்கும் இப்போட்டியில போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் பாகிஸ்தானும் பங்கேற்கிறது. (8)

## மலரும் நினைவுகள்

2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி வரை ஆஸ்திரேலியா நாட்டின் தலைநகர் சிட்னியில் 27ஆவது ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றன. 28 வகையான 300 போட்டிகள் கொண்ட இந்த ஒலிம்பிக்கில் 197 நாடுகளைச் சேர்ந்த 6,582 வீரர்களும் 4,069 வீராங்கனைகளும் பங்குபற்றினர்.

இந்த ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையைச் சேர்ந்த அதிவேக ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க 200 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாவது இடத்தைப் பெற்றதன் மூலம் இலங்கைக்கு வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுப் பெருமை தேடித்தந்தார். இதன் மூலம் 1948 ஆம ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் அந்தஸ்தை இலங்கை பெற்றுக்கொண்ட பின்னர் முதன் முதலில் இலங்கையின் சார்பில் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கம் வென்ற இலங்கையர் என்ற பெருமையையும், முதல் வீராங்கனை என்ற பெருமையையும் சுசந்திகா ஜயசிங்க ஈட்டிக்கொண்டார். 1948 ஆம் ஆண்டில் முதன் முதலில் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையின் சார்பில வீரர்கள் பங்குபற்றிய வேளையில் 'டங்கன்வைற்' என்ற வீரர் 400மீற்றர் தடைதாண்டும் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்றெடுத்துள்ள போதிலும் அவர் பிறப்பால் ஆங்கிலேயர் என்ற காரணத்தால் அதனை இலங்கையர் ஒருவரின் சாதனை என ஏற்பதில் இன்றும் சர்ச்சைகள் இடம்பெற்று வருகின்றன.

1992 இல் ஸ்பெயின் நாட்டில் இடம்பெற்ற 25 ஆவது ஒலிம்பிக்கில் 10ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற எதியோப்பிய நாட்டுக் கறுப்பின வீராங்கனை டெராார்ட்டு டுலு இந்த 27 ஆவது ஒலிம்பிக் போட்டியிலும் அதே பிரிவில் போட்டியிட்டு இரண்டாவது தடவையாகவும் தங்கப் பதக்கத்தை வெண்றெடுத்தார்.

வீயெஸ்ரி

அது மட்டுமன்றி அமெரிக்க தடகள வீரர் மைக்கல் ஜோன்சன் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் மீண்டும் இப்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றெடுத்ததன் மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் 400மீற்றர் ஓட்டப்போட்டியில் இரு தடவைகள் தங்கப்பதக்கம் வென்றெடுத்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார். ஊக்கமருந்து பாவித்த குற்றச்சாட்டின்பேரில் பல்கேரியா நாட்டு வீரரொருவரும் ரஷ்ய நாட்டு வீராங்கனை ஒருவரும் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் தாம் வென்றெடுத்த பதக்கங்களை இழக்க நேர்ந்தது. இப்போட்டித் தொடரின் முடிவில் அமெரிக்கா மொத்தமாக 39 தங்கப்பதக்கங்களை வென்று முதலிடத்தையும் ரஷ்யா 32 தங்கப்பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்தையும் சீனா 28 தங்கப்பதக்கங்களை வென்று மூன்றாவது இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன.

## பதக்கம் பறிபோனது

எதென்ஸ்,ஓக.28

4 பேர் கொண்ட 'ஸ்கல்ப்' படகுப் போட்டியில் உக்ரைன் குழு வெண்கலப்பதக்கம் வென்றது. அதில் ஒலெனா ஒலெபிறெங்கோ தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை உட்கொண்டமை ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அந்தக் குழுவின் பதக்கம் பறிபோனது. 4ஆவது இடத்தில் இருந்த ஆஸ்திரேலியா வெண்கலப்பதக்கத்துக்கு உயர்ந்தது. இப்போட்டியில் ஜேர்மனி தங்கத்தைப் பெற்றது.(8)

## பதக்கப் பட்டியல்
### (நேற்று முற்பகல் நிலைவரம்)

| நிலை | நாடு | தங்கம | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|---|
| 01. | அமெரிக்கா | 28 | 31 | 24 | 83 |
| 02. | சீனா | 25 | 17 | 12 | 54 |
| 03. | ஆஸ்திரேலியா | 16 | 11 | 15 | 42 |
| 04. | ரஷ்யா | 15 | 19 | 23 | 57 |
| 05. | ஜப்பான் | 15 | 09 | 10 | 34 |
| 06. | ஜேர்மனி | 10 | 11 | 14 | 35 |
| 07. | பிரான்ஸ் | 10 | 07 | 10 | 27 |
| 08. | இத்தாலி | 09 | 06 | 08 | 23 |
| 09. | ரொமானியா | 08 | 05 | 04 | 17 |
| 10. | உக்ரைன் | 08 | 04 | 07 | 19 |
| 11. | தெ.கொரியா | 07 | 10 | 05 | 22 |
| 12. | பிரிட்டன் | 07 | 08 | 10 | 25 |
| 13. | கிரேக்கம் | 06 | 04 | 03 | 13 |
| 14. | நெதர்லாந்து | 04 | 08 | 08 | 20 |
| 15. | ஹங்கேரி | 04 | 06 | 01 | 11 |
| 16. | சுவீடன் | 03 | 01 | 02 | 06 |
| 16. | துருக்கி | 03 | 01 | 02 | 06 |
| 18. | நியூசிலாந்து | 03 | 01 | 00 | 04 |
| 19. | ஸ்பெயின் | 02 | 09 | 05 | 16 |
| 20. | கியூபா | 02 | 04 | 07 | 13 |
| 21. | கனடா | 02 | 04 | 01 | 07 |
| 22. | பெலாரஸ் | 02 | 03 | 07 | 12 |
| 23. | போலந்து | 02 | 02 | 04 | 08 |
| 24. | பிரேசில் | 02 | 02 | 02 | 06 |
| 25. | ஸ்லோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| 26. | ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| 27. | பல்கேரியா | 02 | 01 | 07 | 10 |
| 28. | எதியோப்பியா | 02 | 01 | 01 | 04 |
| 28. | தாய்வான் | 02 | 01 | 01 | 04 |
| 30. | தாய்லாந்து | 02 | 00 | 03 | 05 |
| 31. | சிலி | 02 | 00 | 01 | 03 |
| 32. | நோர்வே | 02 | 00 | 00 | 02 |
| 33. | ஒஸ்ரியா | 01 | 04 | 01 | 06 |
| 33. | கென்யா | 01 | 04 | 01 | 06 |
| 35. | செக்.குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| 36. | லிதுவேனியா | 01 | 02 | 00 | 03 |
| 37. | சுவிற்சர்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| 38. | இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| 38. | தெ.ஆபிரிக்கா | 01 | 01 | 02 | 04 |
| 40. | ஜமேய்க்கா | 01 | 01 | 01 | 03 |
| 40. | சிம்பாப்வே | 01 | 01 | 01 | 03 |
| 42. | மொராக்கோ | 01 | 01 | 00 | 02 |
| 43. | டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| 44. | அஜன்பைகான் | 01 | 00 | 02 | 03 |
| 44. | பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| 46. | பகாமாஸ் | 01 | 00 | 01 | 02 |
| 46. | எகிப்து | 01 | 00 | 01 | 02 |
| 46. | இஸ்ரேல் | 01 | 00 | 01 | 02 |
| 49. | கமரூன் | 01 | 00 | 00 | 01 |
| 49. | டொமினிக்கன் குடி- | 01 | 00 | 00 | 01 |
| 49. | ஈரான் | 01 | 00 | 00 | 01 |
| 49. | ஐ.அ.குடியரசு | 01 | 00 | 00 | 01 |
| 49. | உஸ்பெகிஸ்தான் | 01 | 00 | 00 | 01 |
| 54. | வ.கொரியா | 00 | 03 | 01 | 04 |
| 55. | மெக்ஸிக்கோ | 00 | 03 | 00 | 03 |
| 56. | குரோஸியா | 00 | 02 | 02 | 04 |
| 56. | கசகஸ்தான் | 00 | 02 | 02 | 04 |
| 58. | போர்த்துக்கல் | 00 | 02 | 01 | 03 |
| 59. | பின்லாந்து | 00 | 02 | 00 | 02 |
| 59. | லத்வியா | 00 | 02 | 00 | 02 |
| 61. | ஸ்லோவேனியா | 00 | 01 | 03 | 04 |
| 62. | எஸ்டோனியா | 00 | 01 | 02 | 03 |
| 63. | ஹொங்கொங் | 00 | 01 | 00 | 01 |
| 63. | இந்தியா | 00 | 01 | 00 | 01 |
| 63. | சேர்.மென்ரீநீக்ரோ | 00 | 01 | 00 | 01 |
| 66. | ஆஜென்ரீனா | 00 | 00 | 03 | 03 |
| 67. | கொலம்பியா | 00 | 00 | 02 | 02 |
| 68. | எரித்திரியா | 00 | 00 | 01 | 01 |
| 68. | மொங்கோலியா | 00 | 00 | 01 | 01 |
| 68. | டிரினிடாட் | 00 | 00 | 01 | 01 |
| 68. | வெனிசுலா | 00 | 00 | 01 | 01 |















## யாழ். மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

**KURSK STATE MEDICAL UNIVERSITY - RUSSIA**

மருத்துவபீடத்துக்குரிய 2003/2004 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிகள் பற்றிய

**இலவச கருத்தரங்கு**

இடம்: உதயன் கேட்போர் கூடம்
காலம்: இன்று (28.08.2004) சனிக்கிழமை
காலை 10.00 மணிமுதல் பகல் 12.00 மணிவரை
நாளை (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00 மணிவரை
யாழ். மாணவர்களுக்கான விசேட பதிவுகளும் உடன் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 077 677079

(C/37296) (11-16-33)

மானிப்பாய் றோட்டரட் கழகம். -செயல்திட்ட இயக்குநர்.



## வாழ்த்துகின்றோம்

இன்று (28.08.2004) சனிக்கிழமை
ஷஷ்டியப்த பூர்த்தி கண்டு மகிழ்வுறும்
ஊரெழு சிவஸ்ரீ பா.பஞ்சாட்சரக் குருக்கள் தம்பதிகள்
சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க
என வாழ்த்துகின்றோம்.

மனமுவந்து வாழ்த்துபவர்கள்:
பிரம்மஸ்ரீ சிவ.லை.நித்தியானந்த சர்மா - வாகீஸ்வரி தம்பதிகள்
(35778)(34) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## நெஞ்சை விட்டு நீங்காத ஒன்பதாம் ஆண்டு அஞ்சலி



| வித்தகனாக | வீரனாக |
|---|---|
| 23 - 11 - 1972 | 28 - 08 - 1995 |

**லெப்ரினன்ட் கேணல் தும்பன்/கீர்த்தி**

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)

*யோகீஸ்வரக் குருக்கள் கிருஷ்ணராஜ சர்மா*

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொள்ளும் மாவீரா!! ~ கிருஷ்ணா
ஆண்டுகள் ஒன்பது ஆனபோதும்
மீண்டு போகாது உன் நினைவு!

வேலணை.

நித்தமும் உம் பிரிவால் தவிக்கும்:
குடும்பத்தினர்
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(35779) (34-11-16-33)



## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரியவரான

**செல்லத்துரை கிருஷ்ணமூர்த்தி**

(ஓய்வுபெற்ற தபாலதிபர், ஊர்காவற்றுறை)
அவர்களின் மறைவு மிகுந்த மன வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது.
மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்து
புனிதராய்த் திகழ்ந்த கிருஷ்ணமூர்த்தி ஐயாவே!
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

அமெரிக்கா. (35790) (11-16-33)

பெறாமகன் குணபாலசிங்கம்
ரவிவர்மன் குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

**செல்லத்துரை கிருஷ்ணமூர்த்தி**



(ஓய்வுபெற்ற தபாலதிபர், ஊர்காவற்றுறை)

வேலணையைப் பிறப்பிடமாகவும் 28/10, குனுப்பிட்டிய வீதி, கொழும்பு-02ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 26.08.2004 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் நாளை (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் பொறளை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*28/10, குனுப்பிட்டிய வீதி,*
*கொழும்பு-02*

(35789) (11-16-33)

தகவல்:
குடும்பத்தினர்.



**நிரஞ்சனாஸ்** சங்கானை



அர்ஜுன் மீனா, சுவாதி நடிப்பில
**அன்பு சகோதரன்** (ரீகல்)
திரை: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி,சனி,ஞாயிறு. STRIKE FORCE (இரவு 8.45பு.நே)
(C/36805) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த **மதுர**



பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்

பிரசாந் மீனா. சரத்பாபு நடித்த **ஷாக்** (ரீகல்)
திகில்காட்சிகள் நிறைந்த



காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00 (புநே)
(C/36415) (12)



## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும்; பழக விரும்புபவர்களும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **தனம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
22-A, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(35791) (11-16-33)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.28

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் ஆறாம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் அன்று மாலை 6.30 மணிக்கு உறியடி விழாவும் இடம்பெறவுள்ளன. மறு நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (10-201)

★ ★ ★

மண்டைதீவு,ஓக.28

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

அண்மையில் புதிதாகப் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திரத் தேரில் விநாயகப் பெருமான் ஆரோகணிப்பார்.(10-88)

★ ★ ★

நவாலி,ஓக.28

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய ரதோற்சவம் இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

தீர்த்தோற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். (100)

★ ★ ★

நவாலி,ஓக.28

ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் சமமந்தப் பிள்ளையார் ஆலய ரதோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். (10-100)

★ ★ ★

அரியாலை,ஓக.28

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்காபிசேகமும் பூசை வழிபாடுகளும் இடம்பெறும்(10-17)


## படிவம்

மாணவ தாதிமார் பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு 2004 இற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் கிடைக்கும்.

BHARATHY PATHIPPAKAM
430, K.K.S. Road, Jaffna.
(C/37503)



Jayoda **ஜயோதா** ජයෝද

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 7344670 முதல் 7356870 வரை
சீட்டிழுப்பு இல. 62 திகதி 26-08-2004

வெற்றி எண்கள் **871939** சுப்பர் எண் **22**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,63,13,775/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,63,13,775/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 107 | 5,000/- | 5,35,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,078 | 500/- | 5,39,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,771 | 50/- | 5,38,550/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,06,727 | 10/- | 10,67,270/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 1,08,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,075 | 100/- | 1,07,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,674 | 20/- | 2,13,480/- |
| மொத்தம் | 1,30,563 | | 56,63,800/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 56,63,800/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,66,13,225/-**

தொடர் இல. 6384552 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 30 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7347044-4-77
7349947-6-68
7347117-1-05
7350542-6-75
7350754-3-93



ஓம்
சிவமயம்

## திருமண அழைப்பு

*அன்புடையீர்,*

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணித் திங்கள் 13 ஆம் நாள் (28.08.2004) சனிக்கிழமை காலை 8.11 மணிமுதல் 9.23 (புதியநேரம்) மணிவரையுள்ள திருவோண நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய கன்னிலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு.திருமதி
யோகலிங்கம் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவகுமாரன்** அவர்களுக்கும்



திரு.திருமதி
அருளானந்தம் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**அன்னவதனி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் சுவாமி கோயிலின் திருப்புகழ் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

*திரு.திருமதி யோகலிங்கம்*
*யோகஸ்தான்*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
*43, Bayshore Drive #5*
*Nepean, Ontario, K2B 6M7*
*Canada.*
*Tel: 613 828-4205*



*திரு.திருமதி அருளானந்தம்*
*வேதவனம்*
*சங்கத்தானை,*
*Tel: 0777 423510*
*0777 52023*

(இரு வீட்டார் அழைப்பிதழ்)

வதிவிட மாற்றம் காரணமாக அனுப்பப்பட்ட அழைப்பிதழ்கள் திரும்பிய படியால் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(C/37642 ) (11-16-33)



## யாழ். வர்த்தகக் கண்காட்சியில்

(27.08.2004 - 28.08.2004)

12 நபர்கள் பயணம் செய்யக்கூடிய

**முச்சக்கர வண்டி அறிமுகம்**



அறிமுக விலை
4,12,000/=

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
112, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2025, 2024

(C/37601) (11-16-33)

# யாழ். மருத்துவர் சங்க மாநாடு நேற்று வைபவரீதியாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்ப்பாணம் மருத்துவச் சங்கத்தின் வருடாந்த மாநாட்டுத் தொடர் நேற்று ஆரம்பமானது. யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமான முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி கணேசரட்ணம் கலந்துகொண்டார்.

முதலாவது ஆரம்பவிழாவில் வைத்திய கலாநிதி அலோகா.பத்திரண, சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ரவிராஜ் ஆகியோரும்,

இரண்டாம்நாள் நிகழ்வில் வைத்திய கலாநிதி அரியராணி ஞானதாசன், வைத்திய கலாநிதி ஏ.சிறீதரன், வைத்திய கலாநிதி ஆர். கௌரிசங்கர் ஆகியோரும்-

மூன்றாவது அமர்வில் வைத்திய கலாநிதி பி.ஜெயரட்ணம், வைத்திய கலாநிதி எஸ். நவநீதன், வைத்திய கலாநிதி ராஜேந்திரா, பேராசிரியர் கே.ஐ.டீன், வைத்திய கலாநிதி பெரேரா ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்.

மாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகும். இதில் பேராசிரியர் நிலாந்தி டீ சில்வா, டாக்டர்களான கே.குருபரன், எ.கே.மொறெஸ், பிரதீப்குமார், டி.சி. அம்பலவாணர், ருமலா மொறெல், பி.ஜீ.ரா, ஆர்.மணிவாசகன், திருமதி நாகேந்திரன் ஆகியோர் வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றுவர்.

மாலை அமர்வு பிற்பகல் 4மணிக்கு யாழ. பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகும். இதில் நினைவுப் பேருரை மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-4)

# ரணிலை அழைத்து....

(முதலாம் டக்கத் தொடர்ச்சி)

வும் தேவை. இதற்கான இடைவெளி இன்னும் உண்டு. வாய்ப்பும் இருக்கின்றது.

எனினும், இதற்கான திட்டமிட்ட ஒழுங்கான - ஏற்பாடுதான் இன்னும் இல்லை.

சமாதான செயற்பாடு தொடர்பில் ஜனாதிபதி, ஆலோசனைக் குழுவொன்றை முன்மொழிந்திருக்கிறார். அப்படியே அது இருக்கிறது. பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இவ்வாலோசனைக்குழு ஊடாக நிறையவே பங்களிப்புச் செலுத்தமுடியும். - என்றார் மனோ தித்தவெல.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சை மீண்டும் தொடர்வதற்கு ஜனாதிபதியும் அவரின் அரசும் அதிகசிரத்தை எடுத்து வருகின்றது.

இதில் மக்களிடையே பல்வேறு வித்தியாசமான கருத்துக்கள் நிலவலாம்.

பேச்சை மீளவும் ஆரம்பிப்பதில் நோர்வே அனுசரணையாளர்களுடன் இணைந்து செயலாற்றும் எண்ணமும் நீடிக்கிறது. புலிகள் முன் வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு மாற்றாக இன்னுமொரு இடைக்கால ஏற்பாடு பற்றிய - மேலோட்டமான - கலந்துரையாடலும் இடம்பெற்றுவருகிறது.

எனினும், அரசின் இந்த இன்னுமொரு இடைக்கால முன்மொழிவை முன்னெடுப்பது தொடர்பில் பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன - என்றார் மனோ தித்தவெல.

பேச்சை மீளத் தொடங்குவதில் அரசு போதிய கரிசனை காட்டுவதாக் தெரியவில்லை. இப்படி ஒரு நம்பிக்கையீனம் உண்டு என்பதற்கு விளக்கமளிக்கும் முகமாகவே மனோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேச்சை விரைவில் ஆரம்பிப்பதற்கான தேவை குறித்து சர்வதேச சமூகம் வலியுறுத்தியே வருகிறது. இந்த வலியுறுத்தல் தொடர்கிறது. பேசுவதாலும், பேச்சை மீள ஆரம்பிப்பதாலும் கேடுதான் விளையும் என்றோ அவை பிரயோசனமற்றவை என்றோ நாம் கருதவில்லை. அப்படியானவர்களும் அல்லர் நாம்.

எனினும் பேச்சு மீள ஆரம்பிக்கப்படும என்ற பெரும் எதிர்பார்ப்பு உண்டு என்றார் அவர்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக ஜே.வி.பி. கடுமையாக அதைக் கண்ணிலும் காட்டாதே என்றவாறு - குரல்கொடுத்து வரும் போக்கு குறித்தும் மனோ கருத்துத் தெரிவிக்கையில் -

"ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, மிகவும் தாராளப் போக்குடையது. அதன் பங்காளிகள் தமது கருத்தினை பகிரங்கமாக வெளியிட அது அனுமதிக்கிறது.

"ஜே.வி.பியினின் நிலைப்பாடு, ஆச்சரியப் படக்கூடியதல்ல. அவர்கள் அப்படித்தான் தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டில் தான் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் இருக்கும் அதிகாரத்தை மானிலங்களுக்குப் பகிர்வதில்தான் பிடியாய் இருக்கிறார்கள். மக்கள் ஐக்கிய முன்னணியோ, அதிகாரப் பரவலாகத்தை விரும்புகிறது. இரு தரப்பினிடமும் விட்டுக்கொடுப்பு வேண்டும். பெரும்பாலான மக்கள் எதனை விரும்புகிறார்களோ அதனைத்தான் நாம் செய்வோம்.

சகல பிரதானமான கட்சிகளும், சமாதானப் பங்காளிகளும், பெரும்பான்மை மக்களும் யுத்தத்தை விரும்பவில்லை. பேச்சு ஆரம்பமாகவேண்டும். சமாதானத் தீர்வு வேண்டும் என்பதைத்தான் விரும்புகிறார்கள்.

எல்லாக் கட்சிகளுக்கும் இப்போதைக்கு அவசியமானது கொதிப்பைத் தவிர்த்து பழி வாங்குவதைதத் தவிர்த்து பேச்சு மீள ஆரம்பமாகும் சூழலைத் தோற்றுவிப்பதாகும் - எனத் தெரிவித்தார் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல

(க)

## சின்னபாலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டும் தப்பிச் செல்வது அவரது எண்ணமாக இருந்தது. ஆனால், அன்று அவர் சுடப்பட்டு இறந்தார்.

இப்படி அந்தச் செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

தினமுரசு ஆசிரியர் அற்புதராஜா நடராஜா (அற்புதன்), ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஆகியோரின் படுகொலைகள் குறித்தும் அந்த ஊடகங்கள் பிரஸ்தாபித்துள்ளன.

எனினும் சின்னபாலா கொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஈ.பி.டி.பி. கட்சி குற்றஞ்சுமத்தியிருந்ததும் -

கொழும்புப் படுகொலைகளுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்றும் புலிகள் மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். (க)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன், கல்லம்பத்தைக் கிராமத்தில் வைத்து சம்பவ தினத்தின்போது ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் -

இவர்களில் ஐவர் பொதுமக்கள் என்பதனால் அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டனர்.

ஊர்காவல் படையினர் இருவரும் ஆயுதங்களுடன் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தமிழீழக் காவல்துறையினரிடம் இவர்கள் கையளிக்கப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர். - என்றார் (எ-7)

## வெளியீட்டு விழா

பலாலி ஆசிரியர் கலாசாலையின் 'கலாவதி' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலையின் மாணவர் மன்றத்தலைவர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். ஆசியுரையை கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தியும் வெளியீட்டுரையை திருநெல்வேலி செங்குந்த இந்துக்கல்லூரி அதிபர் திருமதி சி.விசுவலிங்கமும் நிகழ்த்துவர்.(எ)

## உளமருத்துவ நிபுணரின் வைத்திய ஆலோசனை

கொழும்பிலுள்ள சிறுவர்கள் உளமருத்துவ நிபுணர் யாழ். வந்துள்ளார் என்றும் -

அவர் இன்று காலைமுதல் யாழ். வைத்தியசாலையின் உளமருத்துவப் பிரிவில் குறிப்பிட்ட சிறுவர்களைப் பார்வையிடவுள்ளார் என்றும்-

சம்பந்தப்பட்டோர் இதில் கலந்து பயன் பெறலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் எப்ரல் மாதம் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழு ஒன்று நோர்வேயின் றேனா இராணுவ முகாமுக்கு வருகை தந்தது. அமைதி காக்கும் நடைமுறையில் நோர்வே நாட்டுப் படையினர் எவ்வாறு செயற்பாடுகின்றனர் என்பது குறித்தே அவர்களுக்கு அங்கு விளக்கப்பட்டது. - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கின்து. (4-7)

# இடைக்கால வரைவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நடைபெற்ற பேச்சுக்களில் எமது தரப்பு மிக நேர்மையுடனும் தெளிவுடனும் பங்கேற்றது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை முதலில் கவனத்தில் எடுப்பதற்காகவே இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்தை ரணில் அரசிடம் கையளித்தோம்.

இருப்பினும் அந்தத் திட்ட வரைவை ரணில் அரசு ஆராய்வதற்கு முன்னதாகவே ஜனாதிபதி சந்திரிகா பல அரசியல் குழப்ப நிலையைத் தோற்றுவித்தார். அதனாலும் அதற்குப் பின்னர் நிகழ்ந்த அரசியல் குழப்பங்களினாலும் எமது இடைக்காலத் திட்டம் குறித்து தெற்கில் தவறான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் ஒரு சக்தியாக ஆர்வத்துடனேயே இருக்கின்றனர். ஸ்ரீலங்கா அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோர்வே பிரதிநிதிகளுக்கு ஒரே குரலில் தங்களது விருப்பத்தைத் தெரிவித்து அவர்களை மீண்டும் சமரச முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். - என்றும் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த கனேடியப் பிரமுகர் ஒப்ரே -

தற்போதையில் நிலையில் இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி அமைப்பு முறையே சிறந்தது. இன நெருக்கடிக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகள் மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர் என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

(எ-4)

## ஈழவேந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழவேந்தன் எம்.பிக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

பின்னர் அங்கு வந்த படை உயரதிகாரிகள் சிலர் இதில் தலையிட்டு சோதனை நடவடிக்கைகள் எதுவுமின்றி அவர்கள் தொடர்ந்து பயணிப்பதற்கு அனுமதி வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரத்தினால் தமக்கு சுமார் ஒரு மணித்தியாலம் தாமதம் ஏற்பட்டதாகவும்

இது தொடர்பாக உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரவிருப்பதாகவும் - ஈழவேந்தன் எம்.பி. தெரிவித்தார். (எ-4)


## தவறிவிட்டது

*அல்லாரை வடக்கு. கொடிகாமத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பிரகாந் என்பவருடைய தேசிய அ.அ. (820721756V) சாவகச்சேரிக்கும் கனகம்புளியடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும் அல்லது 077 6080612 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.* (35735)

## பிற்போடப்பட்டுள்ளது

**யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தால் சுன்னாகம் நாகம்ஸ் திரை யரங்கில் நாளை (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த திரைப்படக்காட்சி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. வேறு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**சமூகவியல் சமூகம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(35788)(33-11-16)

**SKY Computer (Pvt) Ltd.**
No.89, Kandy Road,
Chundikuli,Jaffna.

Ms.Office (3 மாதம்) 1500/=
Ms.Word (1 மாதம்) 500/=
Ms.Excel (1 மாதம்) 500/=
Ms. Access (1 மாதம்) 500/=
Ms.Power Point (1 மாதம்) 500/=
Auto CAD (3 மாதம்)

*புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.
*இலகுவான தவணைக்கட்டண முறை.
ஆரம்பம்: 01-09-2004
Today You Learn Tomorrow you Lead
T.P. No: 4590325

(சீ-37210)


# மரண அறிவித்தல்கள்

## சர்வானந்தம் ஜெயானந்தரஜீவ் (ராயு)

**(பண்டத்தரிப்பு இளந்தென்றல் உரிமையாளர்)**



சந்தை வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சர்வானந்தம் ஜெயானந்தரஜீவ் நேற்று (27.08.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சர்வானந்தம் மற்றும் ஜெயமலர் தம்பதியினரின் மகனும் கறோலின் மனுவல், காலஞ்சென்ற மனுவல் செல்லம்மா தம்பதியினரின் பேரனும் காலஞ்சென்ற நீற்ரா இந்திராணி மற்றும் பரஞ்சோதி - புஸ்பராணி, வினிபிரட்-காந்திமதிதேவி ஆகியோரின் பெறாமகனும், தேவதாஸ்-செல்வராணி, ஜேக்கப் ஞானதாஸ்-யசிந்தா, மரியதாஸ்-ஈஸ்வரிதேவி, ஜீவதாஸ்-மேரி ஆகியோரின் மருமகனும் ஷெறமி, ஜொய்சன் ஆகியோரின் சகோதரனும் செல்வகுமார், கௌசிகன், நிஷாகன், ரெறன்ஸ், கிளோறி, றோய், தர்சினி, றெயின், உமைநேசன், ஜரா, சௌமியன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2004) சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.*

(35854)(33-11-16)

தகவல்:
அருளம்பலம் (காங்கேசன்துறை,
அழகுநிலா - இளவாலை)

## ஆழ்வயினார் செல்வராஜா M.Sc. (Agri)

**(இளைப்பாறிய விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்)**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வயினார் செல்வராசா நேற்று (27.08.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் டாக்டர் கிருபாதேவி செல்வராஜா (R.M.O., அரசினர் வைத்தியசாலை, பளை) அவர்களின் அன்புக் கணவரும் கிரிதரன் (விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சிவானி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற அருணாசலம், செல்வராணி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுக்கோட்டையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 28.08.2004 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, கொத்துத்துறை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி ஒழுங்கை,*
*வட்டுக்கோட்டை.*

(35852)(33-11-16)

தகவல்:
திருமதி இ.செல்வராஜா
(மனைவி)

# மரண அறிவித்தல்கள்

## வரப்பிரகாசம் போல் (போல் மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், விவசாயத் திணைக்களம், பேராதனை)



மாகியம்பதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய வரப்பிரகாசம் போல் அவர்கள் நேற்று (27.08.2004) வெள்ளிக்கிழமை கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றெபேக்கா போல் அவர்களின் அன்புக் கணவரும் வரோதயன், ஜெகநாதன், சந்திரவதனா, நீற்றா கமலவேணி, தேவகாந்தன், ஞானோதயன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் செல்வரஞ்சினி, செல்வராணி, வனி பெஞ்சமின் ஜெயராஜா, வரதராஜா, கமலினி, சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகாஷ், பிரபா, ஜொய்சன், ஜெரோமி, ஜெருசன், ஏஞ்சலின், மீரா, ராகுலன், ஜோய், ஹரிஸ், பிரவிந், சிவாந்தி, விதுனன், ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஆத்மா இளைப்பாறுதலுக்காக நாளை (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஜெபவேண்டுதல் ஏறெடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இறையியற் கல்லூரி,*
*மருதனார்மடம், சுன்னாகம்.*

(35795)(33-11-16)

தகவல்:
வண.பெஞ்சமின்
ஜெயராஜா (மருமகன்)

## திருமதி கந்தசாமி நாகரத்தினம்



சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 12/25, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நாகரத்தினம் நேற்று (27.08.2004) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சின்னத்துரை கந்தசாமி (E.S.K. நகைக்கடை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் கருணாகரனின் (பிரான்ஸ்) தாயாரும் ரவீந்திரன் (கனடா), துவாஹரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரமணி (கனடா) ஆகியோரின் அன்பு பெரிய தாயாரும் சின்னத்தம்பி, சின்னத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாலசாமி, திருமதி வைத்திலிங்கம் சொர்ணம், திருமதி நாகலிங்கம் சிவக்கொழுந்து, திருமதி செல்வரட்ணம் ரோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி (பிரான்ஸ்), கௌரி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திரா(பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்), அஞ்சலி (பிரான்ஸ்), உமேஷ் (கனடா), ரமணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/25, கன்னாதிட்டி லேன்,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 021 222 6631*

(35800)(33-11-16)

தகவல்:
E.S.கந்தசாமி
(அன்புக் கணவர்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.